உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௨௪] அக்ஷய ௵ ஆவணிமீ [பகுதி ௧௦.

Vol. XXIV. August-September-1926. No. 10.

## திருவள்ளுவர்.

[௩௬௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

### (2) வள்ளுவர் குடிப்பிறப்பு.

திருவள்ளுவர் 'ஆதி' என்னும் புலைமகளுக்கும் 'பகவன்' என்னும் பார்ப்பனனுக்கும் பிறந்த எழுவரில் இளையவர் என்று சில்லோர் சொல்லும் கதையினை நல்லோர்பலரும் நம்புகின்றார். இக்கதையுரைப்போர், " 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ'மாகையால், வள்ளுவர் தம் முதற்குறளில் '..., ஆதி பகவன் முதற்றே யுலகு' எனுந்தொடராற் றம் 'தந்தை தாய்ப் பேணி' யுள்ளார்" — என்று கூறித் தங்கோள் நிறுவிவிட்டதாக எண்ணி மகிழ்கின்றனர். இக்கதைக் கிவர்விருப்பும், இவர் விருப்புக் கிக்கதையுமே ஆதாரமாவதன்றிப் பிறிது பிரமாணம் காட்டக்காணோம். முதலில் நாயனார் கடவுள்வழிபாட்டு முதற்குறளிற் றம் பெற்றோரை உலகோற்பத்திக்கு முதற்காரணராகச் சுட்டத்துணிவாரா என்பது சிந்திக்கத்தக்கது. இனி இப்பெயருடையார் நாயனாரின் முதற்குரவ ரென்பதைப் பிறிது சான்றுகொண்டு நிறுவியபின்னன்றே, இக்குறளி லக்குரவர்பெயரைக் குறிக்க ஆசிரியர் கருதினரா எனுமாராய்ச்சி எழவேண்டும். ஐயமகற்ற ஆராயுங்கால், ஐயப்படுவதனையே ஆதாரவாக் கொண்டொரு சித்தாந்தம்செய்வது தருக்கமுறையாமா? முதற்குறளிற்கண்ட 'ஆதி'—'பகவன்' எனுஞ் சொற்கள் குறளாசிரியரின்பெற்றோரைக் குறிக்குமாவென்று விசாரிக்குமுன், அப்பெயருடையபெற்றோருண்டெனக் கண்டறியவேண்டியது முதற்கடனன்றோ? குறட்சொற்

களையேகொண்டு அப்பெயரிய பெற்றோருண்டெனவும், அப்பெற்றோருண்
மையைச் சங்கையற்ற பிரமாணமாகக்கொண்டு குறள்மொழிக ளவரைக்
குறிக்குமெனவும் அநுமானிப்பது பிடிவாதிகளின் அபிமானவாதமாக
லாம்; ஆனால் உண்மைகாணும் வாதமுறையாகாதென்பது வெளிப்படை.

இனிப் 'பகவன்' என்பது இவர்தந்தையின்பெயரென்பதற்கு
யாதொரு நூலாதாரவுமில்லாததோடு, அதற்குமாறாக "யாளி, கூவற்
றூண்டு மாதப் புலைச்சி, காதற் காசனி யாகி மேதினி, யின்னிசை
யெழுவர்ப் பயந்தன ளீண்டே" எனும் ஞானாமிர்தநூலடிகளால்
வள்ளுவரின் தந்தை 'யாளிதத்தன்' எனும் வேதியன் என் றொரு கதை
யும் கேட்கின்றோம். இவ் விருகதைகளில் விலக்குவதெதனை? வேண்டுவ
தெது? இன்னும், 'பகவன்' எனும் சொல் தமிழிலும் இருக்குவேதத்தி
லும் அவ்வுருவிற் பயில்வதன்றி, பாணினியாதி வையாகரணிகளின்
விதிப்படிக்கும் வேதத்துக்குப்பிந்திய வடமொழிநூல்களிலும் 'பகவன்'
எனும் பிரயோகம் காணலரிது. 'பகவான்' என்பதே சரியான ஆரியச்
சொல்லாகும். இதனாற் குறளாசிரியர் பாணினிக்குமுற்பட்டவரெனத்
துணிதற் கிடமாவதன்றிக் கடைச்சங்கக்கடைக்காலவேதியனொருவ
னுக்குப் 'பகவன்' எனும் பெயருண்மை அசம்பாவிதமாகும். எனைத்
தானு மிக்கதைக்குக் கதைப்பவர்காதலன்றிப் பிறிதுபிரமாண மில்லை.
பேரில்லாத பலர் பிற்காலத்திற் பாடிவைத்த தனிப்பாடல்களை யொரு
பொருட்படுத்திப் பண்டைச்சரிதங்கள் துணிவது, ஏதவிளைவுக் காதார
மாகுமன்றி, உண்மைதெளிதற் குதவுமாறில்லை. நூறுபல்லாண்டு
களுக்குமுன்பின் னிருந் திறந்த நச்சினார்க்கினியர் பரிமேலழகர்களைக்
கூட்டிவைத்துப் போட்டிசெய்வித்தும், காளிதாசன் போஜராஜன்
பவபூதிகளைச் சேர்த்தவர்தம்முட் சல்லாபச்சண்டை யுண்டுபண்ணியும்
வழங்கிவரும் பல கதைகளையும் தனிச் செய்யுட்களையும் கேட்கும்
நாம், அனையதொரு பொறுப்பற்ற நாடோடிகளின்கதையை நம்பி அறத்
'தேவரை'ப் பறைப்புலையாக்கத்துணிவ தெவ்வாறு கூடும்?

இன்னும், இக்கதைக்குப் பண்டைச் சங்கப்பாட்டுக்களிலேனும்
பழைய பிறபனுவல்களிலேனும் ஓராதாரமும் பெறாமையோடு, குறட்
பழஞ்சுவடிகளெதனிலு மிக்கதையின்சார்பான தனிச்செய்யுட்க ளெழு
தப்படாமையையும் கவனிக்கவேண்டும். திருவள்ளுவமாலைமுழுதையும்

தோன்றுதோட்டு வரன்முறைபேவந்த குறட்சுவடிகளிலெழுதிவருவானேன்? வள்ளுவரும் அவருடன்பிறந்த பிள்ளைகளும், தாதைவாதையால் வேதனைப்படும் ஆதியன்னையைத் தெருட்ட அவர் பிறந்தவுடன் சேனைப்பால்தானுமறியாச் சிறுகுதலைவாய்திறந் துபதேசித்த தெய்வக் கவிகளை அச்சுவடி பெயர்த்தெழுதிவந்தோர் புறக்கணித்துக் களைந்து கழிக்கக் காரணந்தா னென்னோ? குறளுக் குரைகண்ட பண்டிதர் பதின் மரு மிவ்வசலாற்றுக்கவிகளைச் சுட்டாதொழிவானேன்? பிற்காலத்திற் பத்திவினயத்துடன் குறணூலை ஆராய்ந்து பதிப்பித்து வெளிப்படுத்திய நல்லூர் ஆறுமுகநாவலர் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரனைய அரிய தமிழ்ப்பெரியாரும் திருவள்ளுவமாலைச் செய்யுட்களை மட்டுந் தழுவிப் பிறவற்றை நழுவவிட்டிருப்பதும் சிந்திக்கத்தக்க தன்றோ? நக்கீரரையும் கம்பரையும் தமிழகத்திற் றலைநின்ற அறிஞரனைவரையுமே வேதியர்குருதி பாதிவிரவப்பெற் றவர் பெருமையுற்றன ரெனப் பல கதைகட்டி, அக்கலப்பற்ற தனித்தமிழருள்ளே தகவுடையரில்லையென் றொன்றைப்பொருளெச்சமாகச் சுட்டித் தம்முட் டாம் மகிழும் சில நவீன விற்பனரின் கற்பனைத்திறத்தையன்றே ஆதிபால் எழுவரை 'வேளாவேதியன்' காதலற்றுக் கடமையிற்றந்தகதை நின்று நிதர்சனமாக்குகின்றது.

[கதைப்பவர்காட்டுங் கவிதைகளிரண்டு.]

இனித் "தேவை வள்ளுவனென்பானோர்பேதை" யெனும் திருவள்ளுவமாலைச்செய்யுளடியையும், "மெய்த்ததிருவள்ளுவனார் வென் றுயர்ந்தார், கல்விநலந் துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார், சோமேசா" என்ற மாதவச் சிவஞானமுனிவரின் சோமேசர்முதுமொழிவெண்பாவையும் எடுத்துக்காட்டி, இவற்றால், திருக்குறளாசிரியரின் புலைக்குலப்பிறப்பு நாட்டப்படுவதாய்க் காட்டுவாரும் சிலருளர். முதலில் திருக்குறளின் சிறப்புப்பாயிரச்செய்யுட்கள் சங்கப்புலவராற் பாடப்பெற்ற செய்தியே சங்கையறத் தெளிபப்பட்டதொன்றில்லை. வள்ளுவரால் வெல்லப்பட்ட சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர்மட்டும் தம் பிழைக்கிரங்கிக் குறளையும் அதனாசிரியரையும் புகழ்ந்துபாடியிருந்தால், ஒருவாறு அது நாம் கேட்கும் கதைவாலாற்றோடு சிறிது பொருத்தங்கொள்ளும். ஆனால், சங்கப்புலவரொடு அசரீரி, சிவபிரான், கலைமகள் மூங்கையரான உருத்திரசன்மர் முதலியோரும் அச்சேறி வெளிவராத சிலகுறட்சுவடிகளி லின்

னும் பலரும் பாடினதாய்க் காணப்படும் பலபாக்களையும் திரட்டிக் குறட் சிறப்புப்பாயிரமாக்கிவைத்திருப்பதைச் சிந்திப்போர்க்குத் திருவள்ளுவமாலைச்செய்யுட்களை, வள்ளுவராற் பொற்றாமரையிற் றள்ளப்பட்ட சங்கப் புலவர் தம் பிழைபொறுக்கப் பாடின கதையின் உண்மை சங்கைக் கிடமாகும். அதனுடன் அச்செய்யுட்களை நிதானித்துக்கவனிக்குங்கால், தோற்ற சங்கப்புலவர் மனங்கசிந்து அத்தருணம் தத்தமுளத்துதித்த கருத்தை யப்படியே வெளியிட்டதான கதைக்கு முரணாக, ஒருவர் அல்லது ஒருசிலரோ முன் சாவதானயோசனையுடன் பாடித் தொகுத்த பான்மையினை அப்பாக்களே நிரூபிக்கின்றன. வென்றுயர்ந்தவள்ளுவரைப் புகழவந்த சங்கப்புலவரின்பாக்கள் திருக்குறளியல்பும் பெருமையும் மட்டுங் குறிக்கவேண்டுவதியல்பாகவும், திருவள்ளுவமாலைச்செய்யுட்களை யுற்றுநோக்குவார்க் கவை திருத்தமாகப் பொருத்தங்காட்டுங் குறிப்புடன் எண்ணித்துணிந்து பாடிவைத்தபாட்டுக்களென விளக்கமாகும். மேலும், கதையின்படி பங்கமுற்ற சங்கப்புலவர் குறையிரந் தியற்றின தனிப்பாக்கள் குறளுக்குச் சிறப்புப்பாயிரமாமாறில்லை; சங்கத்தார் வள்ளுவரின் "தன்னாசிரியர்—தன்னொடுகற்றார்—தன்மாணாக்கர்—தகுமுரைகாரர் என்றின்னோர்" வகையில் யாருமாகாமையால். திருவள்ளுவமாலை குறணூலின் சிறப்புப்பாயிரமென வழங்கப்பெறுதலால் அதனைச் சங்கப்புலவர் செய்தனரென்னுங் கொள்கை உறுதிபெறுமாறில்லை. இவ்வுண்மை யெதுவாயினு மாகுக. தற்காலம் அதனைச் சங்கையற்றதெனக்கொள்ளினும்,

> "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமிந் நான்கின்
> திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
> வள்ளுவ னென்பானோர் பேதை; அவன்வாய்ச்சொற்
> கொள்ளா ரறிவுடை யார்" (திருவள்ளுவமாலை—௪)

எனும் மாமூலர்பெயர்கொண்ட செய்யுட்கருத்து,—'அமானுஷ்யமான அரிய விழுமிய குறளறநூலையாக்கிய கடவுட்டன்மைவாய்ந்த தேவரை வள்ளுவனெனும் பெயர்கொண்டதொரு கேவலம் மனிதனாகவுட் கொண்டுபேசுவானுளனாயின், அவன் நாயனாரின் தெய்விகத்தன்மையறியமாட்டாத அறிவீனன்' என்று குறிப்பதேயாம். திருவள்ளுவமாலைக் குரைகண்ட திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரவர்களும் பிரமத

மாக "ஒலிக்குறிப்பினாலே சாதியிழிவுதோன்ற வள்ளுவனென்பான் எனினு மமையும்" எனப் பிற்குறிப்பிற் சுட்டினரேனும், தம்முரையில் "அறமுதலாக......வேதப்பொருள்களாகிய நான்கனது கூறுபாட்டைத் தெரிந்து......சொல்லிய தேவனை மறந்தாயினும் ஒருமனிதனாக உட்கொண்டு வள்ளுவனென்றுசொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவனறிவில்லாதவனாவன்........ அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார்" எனவே கூறுதலும் சிந்திக்கத்தக்கது. வள்ளுவப்பெயர் புலைக்குலவகுப்பின் பெயரெனத் தக்க பிறசான்றால் நாட்டினாலன்றி, இக்கவியில் வள்ளுவனென்பதற்கு இழிகுலத்தோன் எனப் பொருள்கொள்ளற் கவசியமில்லை. ஈண்டப்பொருளுரைப்போர் பிற்காலக்கதையைவைத்தே இக்கவியடிக்கும் தம்பொருள்கூறமுயல்வதல்லால், இக்கவி அக்கதைக்கு மேற்கோளாமாறில்லையென்பது மலையிலக்காம்.

இனி மாதவச் சிவஞானயோகிகளின் சோமேசர்முதுமொழி வெண்பா சற்றேறக்குறைய 150 ஆண்டுகளுக்குமுன் எழுந்ததாகும்; அதனுள்,—

மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார், கல்விநலம்
துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார், சோமேசா—உய்த்தறியின்,
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு.

என்னும் வெண்பா வள்ளுவரைப் புலைக்குலத்தவராக்குவாரால் மேற்கோள் காட்டப்படுகிறது.

இக்கவியால் அதனைச் செய்தவர்காலத்தில் வள்ளுவர் ஆதிபாற்பகவனுக்குப்பிறந்த கதை வழங்கியதென்பதும் அக்கதையை அம்முனிவர் தம் முதுமொழிவெண்பாவிற் சுட்டியுள்ளார் என்பதுமட்டும் கிடைப்பதாகும்; மற்றப்படி அக்கதைக்கு முதிய முன்னாதரவுண்டென்பதேனும், அதன்சரிதவுண்மையை அம்முனிவர் ஆராய்ந்து துணிந்த தன்முடிபாகக் காட்டவந்தாரென்பதேனும் அவர்வெண்பாவால் தெளிதற்கில்லை. எடுத்தகுறளுக் கொருகதைகாட்டுமவசியத்தின் பொருட் டவர்காலத்திற் கேட்கப்பட்ட இக்கதையை அவர் தம்வெண்பாவில் முடைந்தாரென்பதே முறையாமன்றி, மற்றிதன் உண்மையை ஆய்ந்து தெளிந்து நிலைநிறுத்துவதே முனிவர்கருத்தெனக்கொள்ளின்

அதற்குப் பல மூரண்பாடு காணுகின்றோம். சங்கத்தை வள்ளுவர் வென்றடக்கியதற்கு வேறுசான்றின்மையை முன்னரே சுட்டியுள்ளோம். அன்றியும், இம்முதுமொழிவெண்பாவிற் பின்னெடுத்துக்காட்டுங் குறளொடு இக்கதைபொதிந்த முன்னடிகள் முரணுவது வெளிப்படை. 'கீழ்ப்பிறந்தும் கற்றுடைய சான்றோரின்பெருமை, மேற்பிறந்தும் கல்லாத கயவர்க்கில்லை',—என்பதை வலியுறுத்தவந்த குறளை யுதகரிக்கும் கதையில், தேவரைத்தவிர யாவராலுமெதிர்க்கொணுக் கல்விநலம்பெருகப் பெற்றுயர்ந்த சங்கத்தாரைக் கல்லாதாரெனக் குறிப்பது பொருத்த மாமா? அக்குறிப்பு முனிவர்க்கில்லையென்பதைக் 'கல்விநலந்துய்த்த சங்கத்தார்' எனு மவர்சொற்றொடர்விசேடமே விசதமாக்கும். இதுவு மன்றிப் பலவேறுகுலமும் தொழிலுமுடைய சங்கப்புலவரனைவரும் ஒக்க மேற்குல வுயர்குடிப்பிறப்புடைய ரன்றாகவே, கதைகூறுமாறு வள்ளுவ ரால் வெல்லப்பட்ட சங்கத்தாரெல்லாரும் "மேற்பிறந்தார்" எனவும் "கல் லாதார்" எனவும் முனிவர்கருதற் கிடனில்லை—முறையுமில்லை. அத னால் இவ்வொருகவிகொண்டு கற்றுப்பாடுடைய வள்ளுவரைப் புலைக்குடிப் பிறந்தவராக்குவது அவசியமும் அழகுமில்லை. சிவஞானயோகிகளே ஆராய்ச்சியின்பயனாகத் தாம்கண்டமுடிபென இக்கதையின் உண்மையை நிலைநாட்ட நினைத்தாலும் அவராய்ந்த ஆதாரவுகளையும் கொண்டமுடிவுக் கவர்கண்ட நியாயங்களையும் நாம் விசாரிப்பது முறையாமேல், ஈண் டவர் தந்துணிவுதுலக்குநோக்கின்றிக் கேட்டகதையைப் பாட்டில்முடைந்தது கொண்டு அக்கதைக் கவரை ஆசிரியராக்கவும் அவர்கவிகொண் டதனை நிலைநாட்டவும் முயல்வது முறையன்றாகும்.

[பறைக்குல மறுக்குங் குறிப்புக்களாவன.]

இனி, வள்ளுவரின் குலமும் குடிப்பிறப்பும் நெட்டிடையிருளில் மறைபட்டுத் தெளிதற்கரிதாகும். பண்டைப் பெரியார்பிறப்பனைத்து மிவ்வாறே தேடரியமுயற்கொம்பாகத்தெரிகின்றோம். நக்கீரர் முதலிய சங்கப்புலவரும், அவர்தமக்குப் பல நூற்றாண்டுகளுக்குப்பிற்பட்ட கம்பரனைய கவிவாணரும் தத்தம் நூலளவில் தமிழகத்தே வாழ்வு பெற்றிருத்தலன்றி மற் றவர் குலம் குடிகளைவிளக்கும் குறிப்புக்களொன் றும் கிடைக்கக்காணேம். காளிதாசன் முதலிய வடமொழிமகாகவிக ளும் இப்படியே அவர்தம் நூலளவிலன்றிப் பிறுண்டு நமக்கு ஏதில ராகின்றனர். சரிதவுணர்ச்சியும் பயிற்சியும் தொன்றுதொட்டு நிலவி

வரும் மேனாட்டிலுங்கூட அண்ணிய நானூறாண்டுகளுக்குள்ளிருந்த நாடகமஹாகவியான ஜெகப்பிரியரின் (Shakespeare) ஜீவிதக்குறிப்புக்களைப்பற்றியும் அவர்பெயரான் வழங்கிவரும் நாடகங்களின் ஆசிரியத்துவத்தைப்பற்றியும் இன்னும் தீரா வாதப்போர் நிகழக்காணும் நாம், சரித்திரக்குறிப்புக்களில் ஆர்வமும் ஆதரவுமில்லாத நமது நாட்டில் ஞாபகத்திற்கெட்டாத நீண்ட பலநூற்றாண்டுகளுக்குமுன் எழுந்துலவி மறைந்த புலமைப் பெருஞ்சுடரார்—பிறங்கு மவர் நூற்கிரணவொளியால் நிலைப்பதல்லால்—அவரைப்பற்றிய பிற சிறுகுறிப்புக்கள் தமிழகத்திற் பேணப்படாமை கண்டு வியத்தற்கில்லை. உலகையும் அதன் நிலைபற்ற வாழ்வையும் வெறுக்கும் நம்மவர், மக்கள் குலம் குடிநிலைகளை மதிப்பதில்லை. இறவா அறிவறநூல்களைமட்டும் பேணிப்போற்றுவாரன்றி, அந்நூல்செய்தார்வாழ்க்கைக்குறிப்புக்களை நம்மவர் பாராட்டும்வழக்கமில்லை. இதனால், குறளாசிரியரின் குடிப்பிறப்பும் மற்று மவர் ஜீவிதக்குறிப்புக்களும் இன்றினைத்தெனத் துணிந்து தெளிதற்குச் சான்றுபோதா.

எனினும், வள்ளுவர் புலைக்குலப்பிறப்பும் சால்புமுடையரெனக் கதைப்பவர் கதையொடு பொருந்தாக் குறிப்புக்கள் ஈண்டுச் சில நினைக்கத் தகும். பெற்றோர்ப்பேணலும் பெருங்குடிப்பெருமையும் குறணூலிற் பெரிதும் பாராட்டப்படுகின்றன. நற்குடிப்பிறப்பும் பிறந்தகுடியைப் பேணிப்பெருக்கலும் மக்கட்கழகும் கடனுமாமென்று புலைக்குலவள்ளுவர் வற்புறுத்துவரா? அன்றியும், அறம்பொருளங்கங்களையும் அவற்றின் நுட்பங்களையும் திறம்படவிரிக்கும் வள்ளுவர் ஆன்ற குடிப்பிறப்பும் அரசவைப்பழக்கமும் உடையரென்பதை அவர்குறள் பறையறைகின்றதே. இன்னும், அவரறநூல் வேதமனைய ஆரியர் பழம்பெருநூல்களின்வடித்தசாரமென முழங்குபவர், பறைக்குலவள்ளுவர் வாலப்பருவத்தே கல்விகேள்விகளால் நிறைந்து இறவாக்குறள் பாடுமுன் "தென்சொற்கடந்து, வடசொற்கடலுக்குமெல்லைகண்ட" தெப்படிக்கூடுமென்பரோ? அவர்காலப் புலையர் தமிழொடு ஆரியமும் பயின்று வருணபேதமழித்து அறவோர் அறிஞருடன் பயின்றுவந்தனர் என்று கொண்டாலன்றிப் பறைக்குலவள்ளுவர் தம் திருக்குறள்காட்டும் அறிவும் கல்வியுமடையுமாறில்லை. 'கல்லாமலும் கற்கவேண்டாமலும் அறம்பாடவந்த மனிதவுருவெடுத்த கடவுள் வள்ளுவர்' என்பார்க்கு இவ்வாராய்ச்சி

அவசியமில்லை. சால்பும் தூய்மையுமான தெய்வத்தன்மை எனைத்துடையராயினும் நாயனர் மனிதவருக்கத்தினர் எனக்கொள்வோருக்குமட்டும் இனைய ஆராய்ச்சிகள் பொருளொடு பயனுடைத்தாம். ஆனால், தேவரைப் பிரமனவதாரமென்பார்மாட்டு நாம் கேட்டறியவேண்டுவதொன்றுண்டு. அறம்பாட அவதரிக்குங்கடவுள் ஓதுவிக்கும் அந்தணராகாமலும், முறைசெய்யு மரசனாகாமலும், பறைபறையும் வள்ளுவனாய்ப் பிறக்கவந்த நோக்கமென்னை? அநாதிதர்மமெனும் சநாதனமுறைகளையும் வருண வகுப்புவரையறைகளையும் நிலைதடுமாற அழித்தொழித்து 'எல்லாவுயிர்க்கும் பிறப்பொக்கும்' எனு முண்மையை நிலைநிறுத்தற்கென்றே மறையவர் பிரமன் பறையனாயினனோ? அன்றிப் பயன்தான் பிறிது யாதோ? நாள் வழக்கில் நம்மவருட் புலைக்குடிமக்கள் கல்விப்பயிற்சி கேள்வியறிவு அறவோர்கூட்டுறவுகளுக்கு இடம்பெறக்காண்பதில்லை. திருக்குறளியற்றற் கின்றியமையாத மதிநுட்பமும் நூலறிவும் அந்நூலாசிரியர் பறையர்குலத்திடையே பெற்றிருக்கவொண்ணாதென்ப தொருதலை. பறைச்சிறுவனைப் பார்ப்பனரெவரும் பாராட்டி வளர்த்துத் தமிழொடாரியமும் பயிற்றுவித்து அற முதலாசிரியனாக்குவதும் அசம்பாவிதம். ஆகவே வள்ளுவர் அவை பெறற்கின்றியமையாத நற்குடிப்பிறப்பும் அறவோர்கூட்டுறவு முடையராதல்வேண்டுமென்றே.

மேலும் புலைமைக்கறிகுறி இழிதகவுடைய புலாலுண்ணலும் களிமயக்குமேயாம். அக்குடிப் பிறந்த வள்ளுவர் தம்மவர்க்குக் குலதர்மமும் பார்ப்பாரனைய பிறர்க்கு ஆபத்விர்த்தியும் வேள்வி ஆராதனைகளுக்கவசியமுமான புலாலையும் கள்ளையும் விலக்கின்றி யாவருக்கும் விதிமுகத்தாற் கடிந்தொதுக்குவது அவர் புலைக்குடிப்பிறப்பொடு பொருந்துவதாமா? இன்னும், கேவலம் கல்விகேள்விகளால்மட்டும் அறியொணாதனவும் நீண்ட நெருங்கிய பழக்கத்தால்மட்டும் தெரியவேண்டுவனவுமான அரசர் அமைச்சர் அறவோர் அறிஞர் வணிகர் வேளாளரின் குடிக்குல வழக்கங்களையும் கூட்டுறவுநலங்களையும் நுணுகியாய்ந்து எடுத்துத் திரட்டித் தெருட்டும் திருக்குறள் அதனை ஆக்கியவர் நற்குடிப்பிறப்பும் மேன்மக்களின் நெருக்கமும் உடையராதலைச் சுட்டாதொழியாது.

இதுவேயுமன்றி, வள்ளுவரைப் புலையராக்கும் கதையே அவருக்கு வேளாளமரபில் வாசுகியெனு மொரு மருவில்கற்புடைமங்கையை மணஞ்செய்வித்து வழுத்துகின்றது. உயர்குடிப்பிறந்த வாசுகியென்பாள்

வள்ளுவரின்வாழ்க்கைத்துணையாவதற்கு அவர் புலைக்குடிப்பிறப்பு ஆசாரச்சீர்திருத்தம் அறியாத பண்டைக்காலத்தி லிடந்தருமா? வள்ளுவரும் வாசுகியும் 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபடினும்', அவள் பெற்றோரும் உற்றோரும் சைவவேளாளமரபொழுக்கங்களை மறந்து வள்ளுவரை மணமகனாகக் கொள்ளஇசைவரா? திணைமயக்கும் குலக்கலப்புமான இம்மணம் அசம்பாவிதமாமேல், அதைக்கூறுங் கதையில் வள்ளுவரின் புலைக்குலப்பிறப்புமட்டும் அங்கீகரிக்கப்படுமாறுண்டா? இனைய பலவற்றானும் வள்ளுவரின் புலைப்பிறப்பு அங்கீகரிக்கத்தக்கதில்லை-என் றொருவாறு துணியலாகும்.

### 3. வள்ளுவச்சொல்லின் வழக்கும் பொருளும்.

இனி வள்ளுவப் பெயர் பறைக்குலத்தையே சுட்டுகின்றதா என்பதும் சிறிதாராயத்தக்கது. பறையரின் புரோகிதவகுப்பினரே வள்ளுவராவர்-என்பதற்குச் சூடாமணிநிகண்டும் பிற்காலப் பிறநூல்களும் மேற்கோள் காட்டப்படுகின்றன. பண்டை நூலொன்றிலேனும் வள்ளுவப் பெயர் தீண்டாமலொதுக்கப்படும் புலையர்க்காமெனும் குறிப்பும் இல்லை. மணிமேகலையில் வள்ளுவனென்ற பெயரும் இல்லை. பெருங்கதை சிந்தாமணி முதலிய கடைச்சங்கத்துக்குமிகப்பிற்பட்ட சில காப்பிய நூல்களுள் விழாக்களையும் மன்னர்மணமனைய நற்செய்திகளையும் யானைப்பிடர்த்தலையிருந்து அகநகரில் அரசவீதிகளிற் றெரிவிப்போர் வள்ளுவரெனச் சுட்டப்படுவதுண்டு. ஆண்டும் ஆனைமேல் அணைமிசையமர்ந்து அரசவிழாக்களைப் பருமுரசொலிக்க அறிவிக்கும் தொழிலுடையோரைச்சுட்டுதற்கன்றிப் புலையர்குலவகுப்பினர் யார்க்கும் வள்ளுவப் பெயர் வழங்கவில்லை. "அணைமிசை யமர்தந் தஞ்சுவரு வேழத்துப், பணையெருத் தேற்றிப் பல்லவர் சூழத், தேர்திரி மறுகுதோறும்" (பெருங் கதை. காண்டம் 2. பகுதி 2. வரி 37—39) மங்கலவிழாக்களை அறிவிப்பதற்கு வேந்தர் புலையரைத் தேடிக்கொள்ளாரன்றே. மேலும், தொல்காப்பியத்தில் துடி பாண் இடும்பனொடு குடியாப்பேசும் பறையரொடுவைத்துப் பிற்காலப் பெருங்கதையும் வள்ளுவமுதியரைச் சொல்லுமாறில்லை. நன்குடிமக்களின்பின்னடிக்குடியான பறையர் சாற்றும் பறையும், அதை அவாறையும் முறையும் வேறு. "அரசு கொற்றத்தருங்கடம்பூண்ட" வள்ளுவரோ, "கோற்றொழில்வேந்தர் கொற்ற

முரசம், பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி யோச்சி, முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித், திருநாள் படைநாள் கடிநா ளென்றிப், பெருநாட் கல்லது பிறநாட் கறையார்'' எனப் பெருங்கதை (காண்டம்-2 பகுதி-2 வரி 29-33) பேசுகின்றது. பெருங்கதையுட்போலவே சாத்தனார் தம் மணிமேகலையிலும்,—

" வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசங்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி

.................................................

முரசுகடிப் பிடூஉ முதுக்குடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி

...............................................

ஒளிறுவாண் மறவருந் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முர சியம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென "

(விழாவறைகாதை 27, 28; 31, 32; 68-72)

என்று தமிழ்முடியாச ரிமிழ்கடிமுரசை வச்சிரக்கோட்டத்தினின் றெடுத்து யானைப்பிடர்த்தலையேற்றி அரசனையும் அனைவரையும் வாழ்த்திப் புகார் அகநகரிற் கரிகாற்சோழன்கட்டளையாற் கால்கோள் விழவின் கடைநிலைசாற்றினவனை 'முதுக்குடிப்பிறந்தவனாக'வே சுட்டியுள்ளார். கொங்குவேளிரும் சாத்தனாரும் அரசன்கோட்டத்துக் கொட்டிலுள் முரசுத்தேவைப் பலியோச்சிப் பழிச்சி விழவுணர்த்த யானையெருத்தத் தேற்றுவதைக் கூறுவதுபோலவே, பாலைக் கௌதமனாரும் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் வண்மைவளமுழங்கும் 'முரசுறைகடவுளை' 'இரும்பலி' யூட்டிப் பாசி யேந்து பவனை 'உயர்ந்தோன்' என விதந்துகூறுவதும் (பதிற்றுப்பத்து-30) கவனிக்கத்தக்கது. இவ்வாறு "வேந்தன்......பெரும்பணைக் கொட்டி"லுள்ளும் வச்சிரக்கோட்டத்துள்ளும் புலைப்பறையர்சென்று அரும்பலி ஓச்சுவரா? அன்றியும் கழுத்திலிட்டறைந்து காலானடந்து கரையும் பறையரின் பறை வேறு; வள்ளுவமுதுமகன் அரசவேழத்தணிமிசையமர்ந்து

மன்னர்மங்கலப்பெருநாள்வழுத்தும் 'சோதைமுத்தொடுதாமந்தைஇய வேந்தர் கொற்றமுரசமும் வேறன்றோ? மேலும், "அரசுகொற்றத்தருங் கடம்பூண்ட முரசெறி வள்ளுவ முதியனைத் தரீஇ" அரசரே நேரில் ஊருக்குரைப்பனகூறுகின்றதனாலும், வேந்தர்வெற்றிமுரசைப் பலிதந்து பரசி 'அரசுவருவேழத்துப் பணையெருத்தேற்றி' 'பறவருந் தேரும் மாவுங் களிறுஞ் சூழ்தர' உலகை அரசொடுவாழ்த்தி அணிவிழவறையும் வள்ளுவனே 'அரசுகோற்றத்தருங்கடம்பூண்ட'வனும் முதுக்குடிப் பிறந்தோனும் உயர்ந்தோனும் பண்டைப் பனுவல்கள் பாராட்டுவ தாலும், அரசருக்கருங்கடம்பூண்டதோருத்தியோகம் உடையனே வள்ளுவனாகவேண்டுமென அறியக்கிடக்கின்றது.

இனி இதன் தொடர்பாகச் சேந்தனார்திவாகரத்தில் "வள்ளுவன் சாக்கையெனும்பெயர் மன்னற்குள்படு கருமத் தலைவர்க் கொன்றும்" என்று விளக்கியுள்ளமையும் ஈண்டுக் கவனிக்கற்பாற்று. இதனாலும் மன்னர்தம் உள்படுகருமத்தலைவர்க்கு வள்ளுவரென்பது உத்தியோகப் பெயராதல் தெளிகின்றோம். தற்காலத்திலும் அரசனையை பெருமக்களுக்கு அன்பும் நம்பிக்கையுமுடைய ஆப்தர் உட்கருமத்தலைவர் (Private Secretaries) ஆக அமரக் காண்கின்றோம். எனவே, பண்டைக்காலத்திலும் தமிழரசர்தம்மகத்தே புறக்கருமத்தலைவரான ஏனாதியரொத்த வரிசையும் பதவியுமுடைய அகக்கருமத்தலைவரான உத்தியோகஸ்தர் இருந்தனரெனவும் அவர் வள்ளுவரெனவழங்கப்பெற்றாரெனவும் தெளிகின்றோம். கடைச்சங்கத்துக்குமுற்பட்ட குறளாசிரியர்காலத்தில் வள்ளுவப்பெயர் சாதிகுறியாமல் மன்னருள்படுகருமத்தலைமைத் தொழில்குறித்ததாக ஏற்படுகின்றது. எனவே, வள்ளுவப்பெயர் சங்க காலத்திற் றமிழரசர் அகம்படுகருமத்தலைமையுத்தியோகப்பெயராகவும், பெருங்கதையும் சிந்தாமணியுமெழுந்த இடைக்காலத்தே அவ்வுத்தியோகஸ்தரின் தொழிலிலொன்றான அரசவிழாக்களை அறிவிப்போர் பெயராயும் நின்று, பிற்காலத்திற் பறைபருக்குப் புரோகிதரும் நிமித்திகருமான ஒரு புலைவகுப்பினரின் சாதிப்பெயராய்வழங்கலாயிற்றெனத் தெரிகின்றோம். இப்படியே முன் ஜாதிகுறியாத குறிஞ்சித்திணைமக்கள்பெயரான குறவர் எனுஞ்சொல் தற்காலத்திற் குறிசொல்லுமொரு பஞ்சமவகுப்பினரின்சாதிப்பெயராய்வழங்குவ தறிவோம். இவ்வுண்மையறியும் நாம், இக்காலத் தொருவனை வள்ளுவனெனில் வள்ளுவச்சாதியிற்பிறந்த

வனைக் குறிப்பதெனக் கொள்ளுமுறைகொண்டு, பிறப்பாற் சாதியறியாத முன்சங்கத்தமிழுலகில் வள்ளுவரெனுஞ்சொல் தொழில் குறியாது சாதி குறிப்பதெனத் துணிதல் முறையாமா? வள்ளுவரென்று ஒருசாதி வகுப்பே தொல்லைத்தமிழகத்திலிருந்ததாய் அறிந்தபாடில்லை. பழம் பனுவல்களில் வள்ளுவப்பெயர் அரசரகம்படுகருமத்திபரையே சுட்டக் காண்கின்றோம். அதனால், அப்பெரும்பழங்காலத்துக் குற ளாசிரியர் வள்ளுவரென்று வழங்கப்பெறுவதுகொண்டு—அவரைத் தற் கால வள்ளுவச்சாதிவகுப்பில் தள்ளிவிட யார்க்குமுரிமையில்லை. அப் பெயரால் நாம் கொள்ளற்குரியது, அவ்வாசிரியர் அவர்காலத் தமிழரசன் ஒருவன்பால் 'உள்படுகருமத்தலைவ'ராக அமர்ந்தவராதல்வேண்டுமென் பதே. பிரித்தானியா (Britain) வில் பேரமைச்சனாயிருந்த பேகன் (Bacon) பெருநூலெழுதியபின்னர் அவனமைச்சனாயிருந்தவலாறு முழுதும் மறந்து அறிஞர்கூட்டத்தில்வைத்தெண்ணப்படுவதனையே பெரும்பாலோர் அறிவர். சாணக்கியரை அவர்பெயரால் நின்றுநில வும் நூலாசிரியரென அனைவரும், சந்திரகுப்தன்மந்திரி என்றவரை வெகுசிலருமே கூறக்காண்பாம். இம்முறையில் நம் முதற்பாவலரும் அரசன் அகக்கருமத்தலைமைவகித்து வள்ளுவப்பதவியும் பட்டமும் பெற் றவ்வுபசாரப்பெயரானழைக்கப்பட்டிருந்தவர், பின் தம் இறவாக் குறணூலை இயற்றிப் புகழ்சிறந்ததனால், கேவலம் உத்தியோகப்பதவி யைப் பாராட்டி அவருக்குப் பெருமைகூறக் காரணமில்லாது அப் பெயர்ப்பொருளை மறந்த மக்களின் நெடுவழக்கால் வள்ளுவப்பெயர் அவர்க்குமட்டும் நின்றுவரவாய்த்ததுபோலும்.

மேலும், வள்ளுவப்பெயர்-சங்ககாலத்தமிழகத்திற் பறையரினொரு வகுப்புக்கும் சாதிப்பெயராகாமல், தகவுடைய முடிமன்னர்மகட் கொடைக்குரிய வேளிர்-குறுநிலவேந்தரிடை வழங்கிவந்த செய்தியு மீண்டுச் சிந்திக்கத்தக்கது. கடைச்சங்ககாலத்துக்குமுந்தியபுலவர் முதுசுவைப்பாக்களையுங் கொண்டுளதாகக் கருதப்பெறும் புறப்பாட் டில், ஒருசிறைப்பெரியனார், மருதனிளநாகனார், கருவூர்க்கதப்பிள்ளை எனும் பண்டைப் பாவாணர் பாடிய நாஞ்சிற்குரிசிலின்பெயர் "வள்ளு வன்" எனச் சுட்டப்படுகிறது. இஃது தவ னியற்பெயராதலொன்று; அன்றேல், அவன் சேரன்மாட்டன்புடையனாய் அவனுக்குப் படைத்

துணைநின்றதாயறிகின்றோமாகையால் அக் குடச்சேர அரசன்கொற்றத் தருங்கடம்பூண்ட உள்படுகருமத்தலைவனாயிருந்தபதவிபா லெய்திய பட்டப்பெயராதலொன்றாம். எதுவேயாயினும், வேளாண்மரபிற் குறுநிலவேந்தனுக்கு "வள்ளுவன்" எனும் பெயர் புறப்பாட்டில் வழங்குவதாலும், சங்கநூல்களில் அது புலைக்குலச்சாதிப்பெயராக யாண்டும் பயிலாமையானும், வள்ளுவப்பெயர் மன்னருள்படுகருமத்தலைவர்க்கொன்றுமென்றே சேந்தனார்திவாகரத்திற் செப்புவதாலும், அப்பெயருடைமை கொண்டு அறப்பழங்காலக் குறளறநூலுடையாரைப் பறைக்குலத்தவராக் கருதல் முறையன்றாம்.

இன்ன பலகாரணங்களாற் பொய்யில்புலவருக்கு "வள்ளுவ"ரெனும் பெயர் இயற்பெபராகாமல், பதவியுந் தொழிலு முதவவந்தொன்றிநின்றதொன்றென்று நினைப்ப திழுக்கன்றாம். அன்றி, இயற்பெயரெனவே இயம்பினுமிசையும். "சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிக்கு, மியற்பெயர்க்கிளவி முற்படக்கிளவார்" எனுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில்—யாருக்கும் காரணச்சிறப்புப்பெபரை முற்கூறி அவரியற்பெயரைப் பிற்பட வழங்குவதே தமிழ்மரபென்பதை வலியுறுத்துவதற்குச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் இருவரும் "முனிவன் அகத்தியன்" "சோழன் வன்கிள்ளி" என்பவரோடு 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என்றதனையும் உதாரணமாக உடனெடுத்துக்காட்டியசெய்தியைச் சிந்திப்பின், 'முனிவன்' 'சோழன்' 'தெய்வப்புலவன்' எனச் சிறப்பினாகிய பெயர்நிலைக்கிளவிகளுக்குப் பிற்படக் கிளக்கப்படும் 'அகத்தியன்' 'வன்கிள்ளி' என்பனபோலவே—திருவள்ளுவனென்பதும் நாயனாருக்கு இயற்பெயராமென்பது அவ்விருபேராசிரியருக்கும் ஒப்ப முடிந்தகருத்தெனத் தெளியலாகும். இவ்வா றிவர்க் கீதியற்பெய ரென்பாரோ டெமக்கு வாதமில்லை; ஏனெனில், இயற்பெயரென்போர் அப்பெயர்கொண்டு வள்ளுவரைப் புலைக்குலம் புகுத்திப் பிழையார். வள்ளுவப்பெயர்காரணமாகத் தெய்வப்புலவரைப் புலைக்குலத்தவராக்கவிரும்புபவருடன்மட்டுமே ஈண்டு வாதமாதலானும், இபற்பெயராக்கொள்ளல் அவ்விருப்புடையோர் வழக்குக்குதவாமையானும், காரணச் சிறப்புப் பெயராய் எழுந்து பின்னியற்பெயராய்நிலைத்ததெனக்கொள்ளுவார்க்குமட்டும் அப்பெயர்நிலைக்கிளவி சாதிகுறியாது "வேத்தக வினைமை"யே குறிப்பதெனக்காட்டி யமைவேம்.

இனி வள்ளுவப்பெயர் தொழிலையே குறிக்குமாயின், குறளாசிரியரும் குறளுமே அப்பெயரான் வழங்கப்பெறுவது வழக்காறுமா?— என்பார்க்குக் கூறுவம். சால்பும் தகவுமுடைய பெரியாரை அவரியற் பெயராலழைத்தல் தமிழகத்தில் மரபன்று—என்பது யாவரும் அறிந்த தொன்றும். தற்காலத்திலும் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையைப் பிள்ளையவர்களென்றும், நல்லூர் ஆறுமுகநாவலரை நாவலரவர்களென்றும், இன்னு மிப்படியே ஆங்காங்கு அவ்விடத்துப் பெரியோர் சிலரைக் கலெக்டரவர்கள் திவானவர்களென்னுமே நம்மவர் சொல்லுவதை யாவருமறிவோம். பண்டைக்காலத்திலும் உவாத்திமைத் தொழிலுடைய கணக்காயர் பலரெனினும் அவருட் சிறந்த நக்கீரர்தந்தையை மதுரைக் கணக்காயரெனவும், சிந்தாமணி ஆசிரியரைத் தேவரெனவும், இளங்கோவை அடிகளெனவும் அவரவர் தொழில் பதவிகளானும், தொல்காப்பியர் முதலிய பழம்புலவர் பலரைக் கேவல மவரவர் குடிப்பெயரானுமட்டும் அழைக்கப்படும் வழக்குண்மை அறியாதாரில்லை:— எனவே, தாமே தம் தகுதியாலாவது தம்முன்னோர் வரன்முறையுரிமையாலாவது தமிழ்முடிமன்னரிடம் அவருள்படுகருமத்தலைமைவகித்து, வள்ளுவப் பதவிப்பெயர் வழங்கப்பெற்று, அக்கால வள்ளுவ உத்தியோகம் வகித்த மற்றையோரினும் அறிவு திரு ஆற்றல்களிற் சிறப்பெய்திய காரணத்தால் நமது நாயனார் வள்ளுவரெனும் உத்தியோக உபசாரத் தனிப்பெயராலழைக்கப்பட்டிருக்கவேண்டுமெனவும், பிறகு அவர் திருக்குறளியற்றிப் பெரும்புகழெய்தப்பெற்று—நாளடைவில் ஆட்சியின்மையான் அவரியற்பெயரறவே மறக்கப்பட்டு—அவருக்குத் திருவள்ளுவப்பெயர்மட்டும் நிலைநின்று வழக்காற்றில்வந்திருக்கவேண்டுமெனவும் ஈண்டு நாமறியலாகும்.

## (4) வள்ளுவர் வாழ்ந்த இடம்.

இனித் திருவள்ளுவர் மயிலாப்பூர்வாசியென்பதும், அவரைப் புலையராகப் பாவிக்கும் அடிபற்றகதையையே ஆதாரமாகவுடைத்து. சங்கநூல்களில் மயிலாப்பூர் எங்கும் வழங்கக்காணோம். சங்ககாலத்தில் அவ்வூரிருந்ததற்கு வேறு தக்கசான்று காணப்படவுமில்லை. பிற்காலச் சைவசமயகுரவர் தம் தேவாரத் திருமயிலைப்பதிகப்பாக்களில் மயிலாப்பூருக்கு வள்ளுவர்சார்புடைமை சுட்டவுமில்லை. இக்கதை யவர்

காலத்து வழங்கியிருப்பின், சைவப்பெரியார் திருமயிலாப்பூரைத் திருவள்ளுவர்தொடர்பாற் சிறப்பியாது வெறுக்கவும் மறக்கவும் நியாயமில்லை. சங்கத்தாராற் பாடப்பெறுவிடினும் நீண்டகாலமாய் அப்பெரியார்பெயரால் வழங்கிவரும் திருவள்ளுவமாலையுட் செய்யுளொன்று, "பொய்யில் புலவரை" மதுரைக்குரியராகப் பேசுகின்றதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. அக்கவி வருமாறு:—

"உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. (21)

நாம் கேட்கும் கதை—அவர் மயிலாப்பூரிலே பிறந்து அவ்வூரிலேயே வளர்ந்து மணந்து வாழ்ந்து மூத்தியடைந்தவர்—எனக் கூறுகின்றது. கடைச்சங்கத்தாரை வென்றடக்குவதற்காகமட்டும் மதுரைக்கு ஒருமுறை வந்ததாயும், வந்து தம் இறவாக்குறளாலை அரங்கேற்றியகாலை அவமதித்த தருக்குடைய சங்கத்தார் செருக்குடையத் தாமும், சத்தியலோகத்தில் மனைவியும் தரணியில் தம் தமக்கையுமாய்த் தம்மொடு புலைச்சி ஆதியின்வயிற்றில் அவதரித்திருந்த கலைமகள் ஔவையும், தம் வைகுண்டத்தந்தை வையத்திற் புலைத்தமையனாயிருந்த இடைக்காடருமாகத் தந்தெய்விகத்தன்மையாற் றமிழ்ப்புலம் புணர்கூட்டுண்ட புலவரைக் கோயிற்குளத்திற் குப்புறவீழ்த்தி வென்றபின்னர் மதுரைவிட்டு மயிலாப்பூருக்குச் சென்றுவிட்டதாயும் இக்கதை பேசுகிறது. இஃதுண்மையாயின் வள்ளுவர் மயிலாப்பூருக்கே உரிய புலவரும், மதுரைக்கு ஒருமுறை வந்து மீண்டதன்றி மற்றைய தொடர்புச்சிறப்பற்றவருமாவர். இக்கதையே 'இவரால்வெல்லப்பட்ட சங்கத்தார் தாமரைக்குளத்திற்றள்ளப்பட்டுத் தத்தளித்ததருவாயிற் பாடியது திருவள்ளுவமாலை' யெனவும் வற்புறுத்துகிறது. எனவே, சங்கத்தாருக்கு நாயனார் மதுரைக்குத் தம்மொடு வாதிடவந்த ஏதிலரென்பது தெரிந்திருக்கவேண்டும். அஃதறிந்த சங்கத்தார், தம் வள்ளுவமாலைச் செய்யுளிலேயே, இவரைப் "புனற்கூடற்கச்சு" என மதுரைக்கே இவர் சிறப்புரிமைகூறுவது கதைப்பவர்கற்பனைத்திறத்தை விளக்குதற்குதவும்.

கதைகிடக்க; இவ்வள்ளுவமாலைச்செய்யுள் நம் முதற்பாவலரை வளம்படுகூடலான தென்மதுரைக்கு அச்சாணிபோன்றவரென விதந்து கூறுவதால், மதுரைக்கு ஒருமுறை வாதிடவந்து மீண்டாரெனுங் கதைக்கு மாறாக, நாயனார் மதுரைக்கு விசேடநெருக்கமும் தொடர்புமுடையாராகவேண்டுமெனத் தோன்றுகிறது. சங்கத்தைத் தாழ்த்த வந்து வென்றதும் மீண்டுசென்ற வள்ளுவரை—நல்கூர்வேள்வியார் 'மதுரைக்கச்சு' என வழுத்துவதன் நயனும் பயனும் என்னே? இச்செய்யுளால் அஃதியற்றப்பெற்ற பழங்காலத்தில் வள்ளுவர் கூடலிற் பீடுபெற வாழ்ந்த பெரியாரெனும் வழக்குண்மை வலிபெறுகின்றது. இதனாலும் இக்கதையின்கற்பின்மை தெளியப்படும். இதனால் தமிழெழுந்தநாளெழுந்த பழம்பழையர் பாண்டியரின்மூதூரிற் றமிழியம்பிச்சிறந்த கடைச்சங்கத்தாரும் பரசு நெடும்பழைய முதற்பாவலராய் அறம்பாடி அளிசெய்த தெள்ளியரே வள்ளுவரென்றறியலாகும். எனவே தென்மதுரைப் பெரியாரை வடமயிலைக்குரியரென வழுத்து கதைப் பொய்ம்மை யினி விரிக்கவேண்டா.

## (5) வள்ளுவப்பேரியரின் இல்லறக்கிழவியார்.

இன்னும், இவ்வெண்பாவை உற்றுநோக்கின் இவர்மனைமாண்ட வாழ்க்கைத்துணைவியின்பெபரும் ஒருகால் ஊகித்தறிதற் கிடம்பெறலாமென்று எண்ணக் கிடக்கின்றது. முன்னிரண்டடிகளில் தமிழில் வடமதுரை என வழங்கப்பெறும் மதுராபுரிக்குக் கண்ணன் அச்சாகி நின்றவிவரம் விளக்கப்படுகிறது. சரவணப்பெருமாளையரவர்கள் இவ்வடிகளுக்குப் 'பார்வதியைமணந்த சிவபிரான் வடமதுரையிலிருந்து சிறந்தபடி' என்றுரைத்து இடர்ப்படுவதறிவேம். இடைக்காடர் பிணக்குத்தீர்க்கப் பெருமான் தமதாலயம் தவிர்த்து அதன்வடக்கே வைகையின் தென்கரையில் மதுரையின் வடபாக்கத்திலேயே கோயில் கொண்டிருந்ததாகமட்டும் விளையாடற்புராணம் உரைக்கின்றது. மதுரைக்கும் வையைக்கும் வடக்கே வடமதுரை என்றதோர் பிறிதூரிற் கடவுள் சென்றிருந்தகதை யாண்டுங் கேட்டிலேம். மேலும் திருமாலுக்குக் கேசியெனும் பெயரின்மையான் உபகேசி யென்பது உமையவளுக்கு ஆமாறில்லை. நீலகேசி, பிங்கலகேசி என்பனபோல உபகேசி எனும்பெயர் நப்பின்னையையே குறிப்பதாகும். இதனை விசதமாக

ஸேதுஸமஸ்தானமுதற்பாவலரான பிரும்மஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களும், காலஞ்சென்ற ஈழத்துப்பண்டிதர் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப் புலவரவர்களும் செந்தமிழ் முதற்பகுதியில் இனிது விளக்கியுள்ளார்களாகையால் ஈண்டு விரித்தல் வேண்டா. இனி,—

"மாயனை மன்னு வடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத் துறைவனை" [திருப்பாவை 5.]

"மதுரையார் மன்னன் அடிநிலைதொட்டெங்கு
மதிரப்புகுதக் கனாக்கண்டேன்" (நாச்சியார்திருமொழி 6–5.

"வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான்"
(பெரியதிருமொழி-9-9-6)

"வடமதுரைப்பிறந்தாற்கு" (திருவாய்மொழி-9-1-3)

"மதுவார்சோலை யுத்தரமதுரைப்பிறந்த மாயனே" (ஷை 8-5-9)

என்னும் பல பிரயோகங்களாற் கண்ணன்மதுராபுரியைத் தமிழில் "மதுரை" எனவும், கூடற்றென்மதுரையினின்று பிரித்து "வடமதுரை" எனவும் வழங்குவ தறிவோம். இதனாலும், வள்ளுவமாலைச்செய்யுள்பிறவும் இப்படியே தேவரைத் திருமாலுக்கு உவமித்துச் செல்லுவதாலும், "ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தான்" எனக் கண்ணனைத் திருக்கோவையிற் குறிப்பதாலும், உத்தரமாமதுரைக்கு அச்சாகி உபகேசிதோண்மணந்தவன்—கண்ணனேயாமெனத் துணியப்படும். அன்றியும், இவ்வெண்பாவைச்சொல்லி "இதனுள் உபகேசியார் நப்பின்னைப்பிராட்டியார்" என நேமிநாதவிருத்திகாரர் கூறிவைத்துள்ளமையாலும், இவ்வடிகட்கு இப்பொருளின் இயைபுடைமை வலிபெறுவதாகும். இன்னும், மேற்செய்யுளிற் பின்னையை மணந்த கண்ணன் வடமதுரைக்கு அச்சாணியானாற்போல், வையைவளந்தரு தென்மதுரைக்குத் தமிழ்ப்பெருநாவலர் அச்சாகிநிற்பர்-என நல்கூர் வேள்வியார் பாராட்டிப்பாடியுள்ளார். இதிற் கீதைபாடிய கண்ணனால் வடமதுரை சிறந்தவாறு குறளால் அறம்பாடிய வள்ளுவரால் தென்மதுரை சிறந்ததென உவமான உவமேயப் பொருத்தமும் விசதமாகிறது.

இவ்வளவு பொருத்தமுடனியங்கும் இப்பாவிற் குறளும் கீதையும் உறழும் நயந்தெரித்தபுலவர்—வாளா "உபகேசிதோண்மணந்தான்" என உவமானத்தில் அடைகொடுத்து உவமேயத்தில் அதற்கு ஒப்புமை குறியாமல்—உவமையடை பொருளில்சொற்றொடராகநிற்கவைத்திருப்ப ரென்பதினும், அவ்வடைக்கேற்ப உவமேயத்திற் குறளாசிரியருக்கும் விசேடணஞ்சொல்லியிருப்பரெனக் கொள்ளுதல் இழுக்காதன்றே? மூன்றாமடியில் 'மறுவில்' என்பது 'மருவு' என்பதன் திரிபாடமாகக் கொள்ளிற் செய்யுளிற் சொல்லிசையும் பொருணயமும் சிறப்பதுடன், முற்றுவமை முழுநலமும் பெறுவதாகும். இனி 'மறுவில்' என்பதன் இரண்டாம் வல்லெழுத்தைமாற்றி, 'மருவில்' என இடையெழுத் தாக்கி நிறுத்தினும் இழுக்காது. உண்மையானபாடம் இதுவெனத் துணிதற்கில்லை. எதுவாயினும், "பின்னையைமணந்து கீதைபாடிய கண்ணன் வடமதுரைக்காவதுபோலவே—மாதானுபங்கியை மருவிக் குற ளால்பாடி யுலகுய்ய வுதவிய பெருநாவலர் தென்மதுரைக்கு அச்சாவர்" எனக் கொள்ளுவது பொருத்தம் மிகவுடைத்தென்பதில் ஐயமில்லை. மாதானுபங்கியென்பதைத் தேவர்பெயராக்குவதினும்—மனைமாண்ட அவரறமனையாளின் பெயராக்குவது மிகப்பொருந்தும். அன்னைபோ லொழுகுபவர் என வலிந்துபொருள்கொண்டு நாயனாருக்காக்கவேண்டு மிப் பெயரில், அப்பொருள்கொள்ளுமாறில்லையென ஸ்ரீ அ. குமாரசுவா மிப்புலவரவர்கள் முன்னமே செந்தமிழில் விளக்கியுள்ளார்கள். மாதம்= மதம்+பங்கி=கெடுத்தவன் எனப்பிரித்து, 'சுயகர்வத்தைப் பங்கஞ்செய் தடங்கியவர்' என்னும் பொருளுடையதாக்கி, வள்ளுவருக்கு இப்பெயர் கொள்ளுவதும் சிறப்பும் செவ்வியும் உடையதில்லை. வேதங்களுக்குப் பின் பாவலர் யாவருக்கும்முன் முதற்கவியாவரான வான்மீகியாரை 'ஆதிகவி' என வடமொழியாளர் காரணச்சிறப்பியற்பெயரால் வழங்கு வதுபோலவே, தமிழகத்திற் பழம்பண்டைப் பெருநாவலரான வள்ளு வரை "முதற்பாவலரென" வழங்கிவருதல் பொருத்தமும் சிறப்பும் உடைத்தாம். அத்தொல்லைநல்லாசிரியருக்கு இடர்ப்பட்டமைவதாகும் வடமொழிப் பெயர்களைச்சூட்டுவதில் நயனும் பயனும் இல்லை. அன்றி யும், பொருளொடுசிறந்த பயனுடைமொழிகளால் யாப்புறவுற்ற மேற் கவியில் திருவள்ளுவர்க்குமட்டும் இருவெறும்பெயர்பெய்துவைத்து, உவமான உவமேய விசேடணங்களுக்கு இயைபுகுன்றும்படி, நல்கூர்

வேள்வியார் செய்புள்செய்திருக்கமாட்டாரன்றே. 'மாதானுபங்கி' என்பது தேவர்திருத்தேவியாருக்கு இயற்பெயராயினும் — அன்றிச் சிறப்புப்பெயராயினும்ஆகுக. அத்திரிமுனிவரின்மனைவி அனசூயை போல அறவோரும் அறிவருமான குறளாசிரியர்மனையறத்துணைவியாரும் அவர்காலத்தே அறந்தலைநின்று சிறந்த பெருந்தேவியாராகையால், அவ்வம்மையாரை மணந்துயர்ந்த தேவரின்பெருமை இவ்வினிய பழைய வெண்பாவிற் பாராட்டிப் பாடப்பெற்றுளது. வாசுகியென்பது அவரியற்பெயரென்பதற்கு நாம் கேட்டுவரும் அடியற்றகதையொழியப் பிறிதுபிரமாண மில்லை. ஒருகால் அதுவே யவ்வம்மையாரின்பெயராமேனும், தேவரை வள்ளுவரெனும் இயற்பெயராற்சுட்டாது செந்நாப்போதார் எனும் அவர் சிறப்புப்பெயரால் இக்கவியிற் புகழும் புலவர், இவர் தேவியாரையும் அவருக்கேற்ற சிறப்பியற்பெயர்கொண்டு 'மாதானுபங்கி' எனப் புனைந்து பாராட்டுவதும் பொருத்தமேயாம்.

## (6) வள்ளுவர் வணிகன்வளத்துணையால் வாழ்ந்தவரலாற்றுண்மை.

இனி மயிலாப்பூரில் தனவணிகர் ஏலேலசிங்கரின்வண்மைக்கு வள்ளுவர் மிகவும் கடப்பட்டவரெனவும், இளமைதொட்டு என்ஞான்றும் ஏலேலசிங்கரின் நட்புநலமும் ஈகைவளமும் துணைக்கொண்டு வள்ளுவர் தம் மனையறம்வளர்த்து வாழ்ந்தனரெனவும், நாமறியும் நாடோடிக்கதை நவில்கின்றது. இது மேற்குறித்த வள்ளுவப்பெயர்வாலாற்றுண்மை விளக்கத்தாற் பொய்படும். அன்றியு மிவ்வாலாறு வள்ளுவரை வணிகர் பாற்பெறுவிக்கும் பெருநலத்தில் ஒருசிறிது சடையப்பரிடம்பெற்ற கம்பர் அவரையும், அவ்வாறே கூத்தர் காங்கேய முதலியாரையும், புகழேந்திப்புலவர் சந்திரன்சுவர்க்கியையும் அழிவிலா அமரராக்கித் தமது என்றுமுளதென்றமிழ்நூல் நின்றுவளர்புகழுரிமை உவந் தவருக் குதவியுள்ளார். பவபூதிபனைய பலபாவாணரும் வடமொழியில் இவ்வாறே வள்ளிபலை வழுத்தியுள்ளார். 'உய்வில்லை செய்ந்நன்றிகொன்ற

மகற்கு'எனும் அறந்தெரித்தவள்ளுவரோ, அந்நன்றி கொன்று, அனவரத மளிசெய்த தனவணிகமுதலோனை மறவியெனும் மறலிக்கும்—தொல்லரும்பாவலர் நல்லறமரபிறந்து தம்மைப் பெரும்பழிக்கும்—பலியாக்கும் பான்மையுடையார்? திருமயிலைப்பெருவணிகன்றருமுதவி ஒருசிறிதும் பெற்றிருப்பின், வள்ளுவர் அதனைப் பாராட்டி நன்றிக்கடனாற்ற மறக்க மாட்டுவரோ? யாண்டும் எனைத்தளவும் நம்முதற்பாவலராற் சுட்டப் பெறாத ஏலேலசிங்கற்கு அவர் நெடுந்தொடர்பு சொல்லும் இக்கதையே அதன் இல்லாமைகாட்டற்கு நல்லசான்றாம்.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால், நாயனார் புலைமகளின் பழிமகவல்லரெனவும், கடைச்சங்கக் கடைக்காலத்தவராய் வறியராய் ஏலேலசிங்கரின்வண்மைபால் வாழ்ந்தவரல்லரெனவும், மயிலாப்பூரில் வாழ்ந்து மதுரைவந்து சங்கபங்கஞ்செய்துமீண்ட தறுகணரல்லரெனவும், மூன்றாஞ்சங்கத்தின் முற்காலத்தே மதுரைவாசியாய்—மாதானுபங்கியாரின் மணவாளராய்—குறளடிகளால் அறம்பாடி யுலகுய்யவுதவிய வள்ளன்மையுடையராய்—பண்டைப் பாண்டியருக்கு அருங்கடம்பூண்டு அவருள்படுகருமத்தலைமைவகித்துயர்ந்தபெருந்தகையாய் - அருந்தமிழ் வேளிர்பெருங்குடிப்பிறந்து சிறந்த பெரியருமாவரெனவும், ஒருவாறு தெளியலாகும். தேரரவுளார் ஓராதுரைக்குங் கதையளவிற் கூறப்படும் புலைக்குலப்பிறப்பும், மயிலாப்பூர்வணிகன்கீழ்த் "தொழுதுண்டுபின் செல்லும்" வாழ்வும், சங்கபங்கத்தருக்கும் தக்கசான்றெதுவுமின்றித் தேவர்க்கிவரு உண்மையுணருமொண்மையுடையோர்க்குச் சால்பன்றென்பது நடுநிலையாளருக்கு ஒப்பமுடிவதொன்றாம்.

—

ஸ்ரீ:

# சுக்கிர நீதி

மக்கட்பிறப்புடையார் அறிவு ஆண்மை பொருள் புகழ் முதலியவற்றால் மாட்சியடைதற்கும் இம்மை மறுமை இருமைநலங்களையுமொருங்குடையராதற்கும் தகுந்த கருவியாயமைந்தது நீதிநூலுணர்வேயன்றி வேறில்லை. அதனைப் பண்டைக்காலந்தொட்டே தமிழவரசர்களும் அவரமைச்சர்முதலிய அறிஞர்களும் வடமொழிநீதிநூல்களைப்பயின்றே பொருந்தப்பெற்று அரசியல் நடாத்திவந்தனர் என்பதற்குத் தமிழ்மொழியில் விளக்கமாக வழக்கும் தண்டமும் விரவி அரசியல்முறைபறையும் நீதிநூலொன்றேனும் எழுதப்பெறாமல் அரசியல்முறை நடந்துவந்திருப்பதே போதியசான்றாகும்; இதனால், தொன்றுதொட்டே தமிழறிஞர்களாலும் பயின்று பயனடையக்கிடந்தவை வடமொழிநீதிநூல்களென்பது போதரும்.

அவற்றுள் சுக்கிரநீதியென்னும் இந்நூலானது தீயநெறியிலொழுகியுலகுக் கிடரிழைத்துத்திரியும் அசுரர்களும் திருந்தி நல்வழியிலொழுகி நலனடையுமாறு அசுரகுருவாகிய சுக்கிராசாரியராற் சொல்லப்பட்டதென்றால் அவ்வசுராளவுதீயரல்லாத மனிதவர்க்கத்தை நல்வழிப்படுத்த வல்லதென்பது சொல்லவேண்டுவதில்லை.

இந்நூற்பயிற்சியால் இம்மை மறுமை நன்மை தீமை தெய்வங்கொள்கை ஊழ்வினையுடைமை முதலியவற்றை அங்கீகரிக்கும் ஆஸ்திகபுத்தியும், வருணாச்சிரமதருமங்களில் மதிப்பும், உறவு பகை நட்பு முதலிய பலதிறத்தார்க்கும் தந்தமக்கேற்றவாறு ஒழுகவேண்டு முறைகளையறிதலும், குடும்பவாழ்க்கைக்கு இன்றியமையாத மகளிராடவரொழுக்கம் தாயபாகக்கிரமம் அரசியல்முறை முதலிய உலகநடைக்குரிய பலவகை நெறியுணர்ச்சிகளும் உண்டாகத்தக்கன.

இத்துணைசிறப்புவாய்ந்த இந்நூலை வடமொழிப்பயிற்சியில்லாத தமிழ்மக்களும் எளிதிலுணருமாறு வடமொழிதென்மொழிவல்லமையும் மதிநுட்பமும் பொருந்திய பண்டிதமணியான திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்களாற் செவ்வியதமிழ்நடையில் மொழிபெயர்த்தெழுதி

முடித்துக் கொடுக்கப்பெற்று மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையாரால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்துள் ஆளுந்தகைமையுடைய அரசர்முதலியோரும் பிறரும் பொதுவாகவும் தத்தமக்குச் சிறப்பாகவும் அறிந்தொழுகுதற் குரிய நீதிமுறைகள்பலவும் விளக்கமாகப் பகுத்து விரித் தெழுதப்பட் டுள்ளன. முக்கியமாகக் கவனிக்கவேண்டியவைகளெல்லாம் சிந்திப்போர் மனதிற் பதியும்படி தடித்தஎழுத்தாற் பதிக்கப்பட்டிருக்கின்றன. விளக்க வேண்டிய சொற்பொருள்களை நன்குவிளக்கியும், பிறநூன்முடிபுகளை ஆங்காங்குக் காட்டவேண்டியவழிக் காட்டியும், சுருங்கக்கூறியபொருள் களை விளங்க விரித்துரைத்தும், மூலத்திற் சந்தேகப்படக்கூடியவிடங்க ளில் மொழிபெயர்த்தபொருளுக்குப் பொருத்தங்காட்டியும், வேறுபல நூல்களிலிருந்துதெரியவேண்டியவற்றை ஆராய்ந்தறிந்து தெரிவித்தும், மற்றும் பலவிஷயங்கள் புலப்படுமாறு கீழ்க்குறிப்பு எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கிறது. சுக்கிரநீதிமுதனூலின் அரும்பதங்களுக்கு அகராதி வரிசையிற் பொருளெழுதிச் சேர்த்திருப்பது அதிலுள்ள சந்தேகங்களைப் போக்கவல்லது. காலாந்தரகெதமாய் இக்காலத்தில் வழக்கொழிந்தசொற் பொருள்களை யாராய்ந்தறிந்து மொழிபெயர்த்திருக்கும் அருமை பாராட்டத்தக்கது. இன்னும் இந்தப்புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்க்கும் அறிஞர்களுக்கு அதன்சிறப்பு வியப்புமுதலியன மிகப் பல புலப்படும். இப்புத்தகத்தைப் படிப்பவர்களுக்குண்டாகும் பயனைச் சுருங்கச்சொல்லிற் பழமையான மூதுணர்வு புதிதாயுதிக்குமென்னலாம். ஆகலா லிது எல்லாப்புத்தகசாலைகளிலும் வாசகசாலைகளிலும் கலாசாலை களிலும் தவறுமல் வாங்கிவைக்கத்தரும். இதன்விலை ரூபாய் 4. வேண்டுவோர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச்சார்ந்த மேலைச்சிவபுரி யில் சன்மார்க்கசபையாரிடம் பெறலாம்.

பத்திராதிபர்.

# நற்றுணை நாற்பது.

[௨௪-ம் தொகுதியின் ௩௩௬-ம் பக்கத்தொடர்ச்சி.]

(௪) நாட்டிற் காக நல்லுயிர் நல்கலின்
வீட்டிற் காக விவணலன் வீடலின்
விலங்கு போல விழைஇ விடாது
செந்நீர் சொரிந்து திருவெலாந் தந்து
காக்குங் கணவர் தமக்குக் கசட்டுடல்
போக்கியுயிர்க் காதல ரெனும்பெயர் மெய்ம்மையி
ளுக்குநர் வித்தி னமைவுக் கந்நிலன்
சிறந்தாங் காடவர் செயலாற் சிறந்து
பிறந்த நலன்சேர் பேதையர்
நிறைந்த நீர்சூழ் நிலத்தகத் துளரே.

(௫) மாணாக் கீரே மாணாக் கீரே
யாங்கிலக் கழகத் தருந்தமிழ் விழையும்
பாங்கில ராகிய மாணாக் கீரே
நீவிர்?
ஆடையை யருஞ்சுவை யுணவை யணியை
நாடுத றம்பினு மாங்கில நயக்குதிர்
கத்திரிப் பான்று பெண்களின் வகிர்ந்து
காற்றசை புல்லிற் பழங்குஞ்சி களைந்தனிர்
புதுமை வேட்டுப் பழமை போக்கினி
ராமணக்கு நெய்யை யருந்துதல் போன்று
பாமணங் கெழீஇய பசுந்தமிழ் வெறுக்குதிர்
பூமணங் கிடுசீர்ப் புலமை யாளரை
யெட்டிக் காயென வேப்பங் காயென
வெறுத்து வருத னுமக்கினி தேகொல்
தமைவெறுப் பதுவே தமிழ்வெறுப் பதுவே
தாய்வெறுப் பதுவே புலவர்வெறுப் பதுவே
யாகு மாதலி னருந்தமிழ்ச் சிறுவீர்

நாடுவெறுப் புற்றீர் நல்வினை வெறுத்தீர்
காடுவிருப் புற்றீர் கடவுள்வெறுப் புற்றீர்
வஞ்சத் தீங்தேன் மாட்டொ டேனங்
தஞ்சத் தியாடு தண்ணீர் வாழ்மீ
னின்ன மணக்கு மிபற்கை யுரைக்குநுங்
சாது கொடுத்தீர் கடவுள்வாய் கொடுத்தீ
ரெனினு மிரக்கமே யெய்துபொரு ளாக
நும்மொன் று கூறுவ லெம்மொன் று கேண்மின்
விடுமுறை நாளில் வீடுசென் மகிழ்ச்சியிற்
றமிழ்வகுப்பு வருத றக்கதென் றுன்னுமின்
றமிழ்நவில் புலவர் தம்மைக்காண் பதுவே
தாய்காண் மகிழ்ச்சியிற் றழைத்துக் காண்மின்
சேய்காண் டாயுஞ் சிந்தை குளிர்ந்து
கண்டுபெய் நெய்மணங் கஞலிய பண்ணியங்
தண்டுளி நறவுக் கனிதீம் பாலிவை
கொண்டு கொடுக்கவுட் கோடலிற் புலவோர்
செவிவழி யூட்டுஞ் செறிசுவைப் பனுவலை
யார வுண்டு போஞ ரகற்றுமின்
றுய்வயிற் றெரிவு தகாதழிவு வருஉம்
ஆதலின்?
ஆய வன்பொ டமைந்து
தாயி னகட்டைத் தன்னெனச் செய்ம்மினே.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்,

K. S. நவநீதகிருஷ்ணபாரதி,
தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்,

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[நூசுo-ம் பக்கத் தொடர்ச்சி.]

## கங்கைப்படலம்.

காட்டிலே சென்ற இராமன் கங்கைக்கரையடைந்ததும் அங்கு நடந்ததும் கங்கை கடந்ததும் கூறுவது.

298. வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான்,
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதொ ரழியா அழ குடையான்.

இ-ள். இவன் திருமேனி, அஞ்சனமோ! மரகதமோ! கடலோ! மேகமோ! (என்னும்படி) ஆச்சரியமாயிருக்கின்றது! இவன் ஒப்பற்றதும் என்றும் ஒருபடித்தாயுள்ளதுமான அழகையுடையான். இவனுடைய திருமேனியினின்று பரவும் ஒளியிலே சூரியன் ஒளி (அச்சூரியன் ஒளிமுன் விளக்கொளிபோல மழுங்கி, நாணி ஒளித்தாற்போல,) ஒளிக்கப், பொய்யோ என்னும் (படி சிறுத்த) இடையாளான சீதாதேவியுடனும் இளையபெருமாளுடனும் (வனத்திலே) சென்றான்.

மை—(கண்ணிலிடும்) அஞ்சனம். மறிகடல்—(அலைகள்)மடங்குங் கடல். மழைமுகில்—மழை(யையுட்கொண்ட சூல்)மேகம். வடிவு—உடம்பு. அஞ்சனமுதலியவை இராமன் உடம்பின் வண்ணத்துக்குவமை. அழியா—கெடாத. ஓர்—ஒப்பற்ற.

இராமனது அழகு, அரசவாழ்க்கைக்காலத்திருந்தபடியே துறவு வாழ்க்கையுற்றபோதும் குன்றாமல் ஒருபடித்தாயிருந்ததென்பது குறிக்க, 'அழியா அழகு' என்றார்.

"ஐயோ! அகலல் தல் சூழ்வருதற் காழித்தேர்—வெய்யோற்கனேக நாள் வேண்டுமே" என்பதிற்போல, 'ஐயோ' என்பது, இங்கே அதிசயங் குறித்தது; 'ஐயோ! இறந்தான்' என்பதிற்போல, இரக்கங்குறித்ததன்று. 'ஐயோ' என்பதைப் 'போனான்' என்பதனோடு புணர்த்து "ஐயோ காட்டிற் சென்றான்" என்றும் உரையுள்ளது. இது கடுங் கொண்டு கூட்டு. அன்றி, இதற்குமுந்தியபடலத்தில் 'நாயகன் பின்னும்' என்ற

பாட்டின் உரையின்கீழ் விவரித்திருக்கிறபடி, நீடித்த துக்க வருணனையை, வாசகர் மனச்சோர்வுறாமைப்பொருட்டு, இடை நிறுத்தியகவி, இப்பாட்டையும் இதனையடுத்துவரும் ஐந்து பாட்டுக்களையும் துக்கத்தை நீக்குவனவாகவும் சந்தோடத்தை ஆக்குவனவாகவும் 'பன்னந்துகள்' என்று தொடங்கும் இதன் ஏழாம் பாட்டில் 'உளம் மகிழ்ந்தனர்' என மகிழ்ச்சிநிகழ்ச்சி கூறுதற்குத் தோற்றுவாயாகவும் கூறியுள்ளாராதலால், 'ஐயோ' என்பதற்கு, எவ்வாற்றானும், இங்கே இரக்கப்பொருள்கொள்ளல் பொருத்தமற்றதாயிருக்கின்றது.

இந்தப்பாட்டின் சந்தம், சுந்தரமூர்த்திநாயனார் முதன்முதற் பாடிய 'பித்தாபிறை' யென்னும் தேவாரப்பாடற்சந்தமாகவும், 'சிவசங்கர சிவசங்கர ஹரமேஹர துரிதம்' என்பதை யிறுதியடியாகவுடைய சுலோகச் சந்தமாகவும் இருப்பதனோடு, கவி விரித்துரைக்க எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமான இசையுடையதாயிருத்தல் குறிக்கத் தக்கது.

299. அளி அன்னதொர் அறல் துன்னிய குழலாள், கடல் அமிழ்தின்
தெளி அன்னதொர் மொழியாள், நிறை தவம் அன்னதொர் செயலாள்
வெளி அன்னதொர் இடையாளொடும் விடை அன்னதொர் நடையான்,
களி அன்னமும் மட அன்னமும் நடமாடுவ கண்டான்.

இ-ள். வண்டுகளை ஒத்ததாய்க் கருமணல் நெருங்கிய (தன்மையுடைய) கூந்தலையுடையாளும், அமிழ்தத்தின் (சாரமான) தெளிவை ஒத்த (இனிய) சொல்லையுடையாளும், கற்பானது தவம்போன்றதான ஒழுக்கமாகவுடையாளும், ஆகாயத்தை ஒத்த (எனவே இல்லையெனும்படி நுண்ணியதான) இடையினையுடையாளுமான சீதையுடனே, இடபம் போன்ற(பெருமித)நடையுடையானான இராமன், (பேடை பக்கத்திருத்தலால்) களிக்கின்ற (ஆண்) அன்னமும் இளமையுடைய (பெண்) அன்னமும் (உல்லாசமாக) உலாவுதலை (உவப்புடனே) நோக்கினான்.

அளி-வண்டு. ஓர்குழலாள்—(வண்டு, கருமணலன்றி வேறு) ஒப்பற்ற கூந்தலினாள். இவ்வாறே பின்வரும் ஓர் என்பனவைகளுக்கும் பொருள் கொள்க. அறல்-கருமணல். அமிழ்தின் தெளி-அமிழ்தத்தினுடைய (அதிருசியானபாகமாகிய) தெளிவு. செயல்-ஒழுக்கம் (சங்க அகராதி). அளிஅறல்அன்னதொர்துன்னியகுழலாள்' என்று கூட்டியும் பொருள், கூறலாம். மாதருக்குக் கற்பொழுக்கம், மாதவர்க்குத் தவவொழுக்கம்

போல்வதென்பது புலப்பட, 'நிறை தவமன்னதோர் செயலாள்' என்றார். 'விளையாடுதல் கண்டா' னென்றும் பாடம்.

300. அஞ்சம்பையும் ஐயன்தன தலகம்பையும் அளவா
நஞ்சங்களை வெலஆகிய நயனங்களை உடையாள்,
துஞ்சும்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள்.

இ-ள். ஐந்து (என்னும் எண்ணுள்ள மன்மத) பாணங்களையும் (எண்ணற்ற) இராமபாணங்களையும் (இவ்வளவு கூர்மையுடையனவென) அளந்து (அவற்றினும் மிக்க கூர்மையுடையனவாய்) விடத்தை வெற்றி கொள்ளச் சமைந்த விழிகளையுடையாளான சானகி, தாமரைமலர்களை இராமனது பாதங்கள் (தமக்கொப்பான அழகில்லாதனவென அவமதித்துச்) சிரிக்கின்ற (து போல அழகுமிகுந்து விளங்குவ) தை (உவந்து) நோக்கினாள்.

'நஞ்சங்களை' யென்பதில் கள் அசை (சிந்தாமணி). களி துஞ்சும் வரிவண்டுகள் குழலின்படி சுழலும் கஞ்சங்கள்—களிப்புத்தங்கிய பாட்டினை (ப்பாடுதல்) உடைய வண்டுகள் (தேனை நாடி நெய்) குழல்போல (வருவதும் போவதுமாய்)ச் சுழலப்பெற்ற தாமரை மலர்கள். 'குழலின் மிசை சுழல' என்ற பாடத்துக்குச் '(சீதையின்) கூந்தல்மேலே சுழலாநிற்க' எனப் பொருள்கொள்க. கழல்-பாதம். நகுதல்-சிரித்தல்.

301. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை அமுதின்
கிளைகட்டிய கருவிக்கிளர் இசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளி விழிபோற்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான்.

இ-ள். வேய்ங்குழலின் இசையமுதத்தினும், வீணாகானத்தினும் தேனில் விளைந்த (கற்கண்டுக்)கட்டியினும் (அதிக இனிப்பாகத்) தித்திக்கின்ற சொல்லினையுடைய சீதையின் கண்கள் போல, (வயல்களில்) களை பிடுங்குவோர் (பிடுங்கி) வரப்பில் விட்டெறிந்த நீலமலர்க்கூட்டத்தை (இராமன்) கண்டான்.

தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை அமுதின்—துளைகள் தோண்டி (த் துளைத்து உண்டாக்கி)ய வேய்ங்குழலில் நிரம்பிய இசையாகிய சுவையுடய அமுதத்தைக்காட்டிலும் (கட்டிய-தோண்டின.

கிளை-மூங்கில். சுருதி-இசை). கிளைகட்டிய கருவி கிளர் இசையின்-நரம்பு கட்டப்பட்ட (வீணையாகிய இசைக்) கருவியில் எழுகின்ற இசையைக் காட்டிலும். (கிளை-வீணைநரம்பு; மணிமேகலை). பசை நறவின் விளை கட்டியின்—பசையான (-ஒட்டுந்தன்மையுள்ள) தேனில் விளைந்த (கற்கண்டுக்)கட்டியைக் காட்டிலும். கிளவிகிளி-சொல்லையுடைய கிளி போல்வாளாகிய சீதை. களைகட்டவர்-களைகளைந்தவர். தளை-வரப்பு (என்று வழங்கும் வரம்பு); வயல். தளைவிட்டெறி-வயல்களினின்று விட்டெறிகின்ற; வரப்பில்விட்டெறிகின்ற. குவளை-நீலமலர். 'கிளவிக் கிளர்விழி போல்'என்றும் பாடம். இப்பாடத்தில்'கிளவி'கிளவியை யுடையாளெனப் பொருள்பட்டுச் சீதையைக் குறிக்கும். 'உரைசெய்தல்' உரைகட்டுதல் (சங்கஅகராதி) எனவருதல்போலத் 'தொளைசெய்த' 'தொளைகட்டிய' என வந்ததாகவுங் கொள்ளலாம்.

இப்பாட்டு, ஈற்றடியின் இறுதிச் சீரொழிய, எல்லா அடிகளும் 'தனனத்தன தனனத்தன தனனத்தன தனன' என்ற சந்தக் குழிப்புக்குப் பொருத்தமாக அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது.

302. அருப்பேந்திய கலசத்துணை அமுதேந்திய மதமா
மருப்பேந்திய எனலாமுலை மழையேந்திய குழலாள்,
கருப்பேந்திரம் முதலாயின கண்டாள், இடர் காணாள்,
பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள்.

இ-ள். அரும்பை ஏந்தின, அமுதகலசத்துணையை ஏந்தின மதயானைக்கொம்பை ஏந்தின என்று சொல்லலாம் தனங்களையும், மேகத்தை ஏந்திய (தென்னலாம்) கூந்தலையும் உடையாளான சானகி, கரும்பாலை முதலானவைகளைக் கண்டு (அந்த இனிய காட்சிகள் அளித்த களிப்பினால் முந்திய) துன்பத்தை (ச் சிறிதும்) காணாமல், மலைகளையேந்திய (என்னலாம்) தோள்களையுடையானான இராமனுடன் (வழி நடக்கும் வருத்தம் தோன்றாமல்) விளையாடிக்கொண்டு சென்றாள்.

அருப்பு கருப்பு என்பவை, அரும்பு கரும்பு என்பவைகளின் விகாரம். யமன், இயமன் எமன் ஏமனெனவருதல்போல, யந்திரம் இயந்திரம் எந்திரம் ஏந்திரமெனவரும். 'மருப்பேந்திய' என்பதன் பின்னுள்ள 'எனலாம்' என்பது அருப்பேந்திய எனலாம் அமுதேந்திய எனலாம் மழையேந்திய எனலாம் பொருப்பேந்திய எனலாம்

எனப் பொருத்திப் பொருள்கொள்ளுதற் கியைபாயிருக்கின்றது. இப்பாட்டில் 'ஏந்திய' என்றசொல் புணர்க்கப்பட்ட பொருள்களெல்லாம், தனபாரம் அளகபாரம் புயபாரம் என விதந்தோதப்பட்ட பொருள்களின் உவமானங்களாயிருத்தல் குறித்தற்குரியது. 'ஏந்திளமுலையாளே' என இதற்கடுத்த வனம்புகுபடலத்தில் வருவது இங்கே ஞாபகத்துக்கு வருகின்றது.

வனம் செல்லும் இராமன் இப்போது கங்காதீரத்தைச் சமீபிக்கின்றானதலால், அந்த நதியினால் வளப்படுத்தப்பட்டுள்ள மருதநிலத்தூடு செல்கின்றான். அந்த நிலத்தின் புறஎல்லையில் இராமன் 'களியன்னமும் மடவன்னமும் நடமாடுவகண்டான்', நடுப்பகுதியிற் சீதை 'கஞ்சங்களை மஞ்சனங்கழல் நருகின்றது கண்டாள்', ஊர்க்கடுத்த வயல்களுள்ள பாகத்தில் இராமன் சீதையின்கண்கள்போலக் 'களைகட்டவர் தனைவிட்டெறி குவளைத்தொகை கண்டான்', இப்பால் சீதை ஊர்க்கு அதிகச்சமீபமான இடத்தில், வயல்களிலிருந்து கொண்டுவந்த கரும்புகளை ஆட்டும் 'கரும்பேந்திர முதலாயின கண்டாள்' என்றதனால் அன்னம் தாமரை நீலம் ஆகிய மருதநிலத்து இயற்கைப்பொருள்களும் கரும்பேந்திர முதலிய அந்நிலத்துச் செயற்கைப்பொருள்களுங்கொண்டு மருதநிலவருணனை இனிதுசெய்திருப்பது கருதி மகிழத்தக்கது.

[இராமனாதியோர், தடாகங்களையும் மணற்குன்றுகளையும் சோலைகளையும் நந்தனவனங்களையும் கண்டார்கள். கால்வாய்களிற் பாய்ந்து நீந்தி, உழக்கித் திளைத்துக், கரையேறிய எருமைகள் நெற்பைங்கதிர்களை அவற்றின்பால் கடைவாயில் ஒழுக, மேய்வதையும், நான்குதிக்கும் மீன குதிக்க, மாதர்கள் நீராடுவதையும் கண்டுகொண்டு களித்துச்சென்று கங்கைக்கரையை அடைந்தார்கள்.

அங்கே, தபோதனர்கள், இராமன் தங்களை அடைந்தது பரமபதமே தங்கள் தவப்பயனாகத் தங்கள்பால் வந்ததென்று களிகூர்ந்து அவனைக் காண நாடினார்கள், ஓடினார்கள், கூடினார்கள், ஆடினார்கள், பாடினார்கள், அமிழ்தை உண்பார்கள்போல அவனைக் கண்டார்கள். நீண்ட காலம் நீங்கி நெடுந்தூரம் போயிருந்த மக்களைத் தேடிக்கொண்டிருந்தவர்கள் திடீரெனக் கண்டுகொண்டாற்போலக் களிகூர்ந்து அவனைத் தம் இருப்பிடத்துக் கழைத்துப்போனார்கள்.] .

303. பொழியும் கண்ணிற் புதுப்புனல் ஆட்டினர்;
மொழியும் இன்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்;
அழிவில் அன்பெனும் ஆரமிழ் தூட்டினர்;
வழியில் வந்த வருத்தத்தை வாட்டினர்.

இ-ள். (முனிவர்கள், இராமனுக்கு அபிடேகமாகச், சந்தோடத்தால்) சொரியும் (ஆனந்தக்) கண்ணீராட்டினார்கள்; (உபசரித்துக்) கூறும் இன்சொல்மலர் (மாலை) சூட்டினார்கள்; அன்பமிழ் தூட்டினார்கள்; வழியில் (நடந்து) வந்த வருத்தத்தை வாட்டினார்கள்.

மிதிலைக்காட்சிப்படலம் ௭௦-ம் பாட்டில் 'பாம்பாகிய தாம்பு' என்பது 'பாம்பின்தாம்பு' என வந்ததுபோல, இங்கே 'இன்சொலாகியமலர்' என்பது 'இன்சொலின்மலர்' எனவந்தது. அழிவு—கேடு; குற்றம். ஆரமிழ்து—(பெறுதற்கு) அருமையான அமிழ்தம். வாட்டினார்—குறைத்தார். வாடுதல்—குறைதல் (சிலப்பதிகாரம்).

இராமனைக் கண்டு முனிவர்களித்ததுபோல, இப்பாட்டைக்கண்டு வாசகர் களிப்பரென்பதில் ஐயமில்லை. இது ஏனைய தமிழ்ப் பாட்டுக்கள் போல அடிதொறும் எதுகையும் மோனையும் இயைந்திருப்பதேயல்லாமல், ஆங்கிலப்பாட்டுக்கள்போல, எல்லா அடிகளின் இறுதியிலும் இயைபு (Rhyme) அமைய யாக்கப்பெற்றது நோக்கத்தக்கது.

304. கன்னி நீக்கருங் கங்கையும் கைதொழாப்
பன்னி "நீக்கரும் பாதகம் பார்உளோர்
என்னின் நீக்குவர் யானும்இன் றெற்றந்த
உன்னின் நீக்கினன் உய்ந்தனென் யான்"என்றாள்.

இ-ள். (இராமன் சீதை கையைப் பிடித்துக்கொண்டு கங்கையில் முங்கியபொழுது) கங்காதேவி, கை (கூப்பித்)தொழுது. "உலகத்துள்ளோர் (தம்) பாவத்தை என்(னிடைமுழுகுதலி)னால் நீக்கப்பெறுவார்கள்: யானும் (யான்ஏற்றுக்கொண்ட அவர்கள்பாவத்தை என்னிடை முழுகிய) உன்னால் நீக்கப்பெற்று உய்ந்தேன்" என்றாள்.

கன்னி நீக்கருங் கங்கை—கன்னித்தன்மை நீங்குதல் இல்லாத கங்காதேவி. கைதொழா—கைதொழுது—அஞ்சலித்து. பன்னி நீக்கரும் பாதகம்—(எவ்வாறு நீக்கலாமென்று) ஆராய்ந்து நீக்குதற் கருமையான பாவம். பன்னுதல்—ஆராய்தல் (சிந்தாமணி, பெருங்கதை). பன்னி

யென்பதுக்கு வாழ்த்தி என்றும் பொருள்கூறுவர். உய்ந்தனென்—ஈடேறினேன்—கடைத்தேறினேன்.

கங்கை திருமால் "திருவடியிற் றோன்றினமையால் எற்றந்த உன்னினெனவும், அவர்கள்பாதகத்தையேற்றுப் புண்ணியந் தந்தமையால் (யான்) மேற்கொண்ட அவர்கள் பாதகத்தை நீக்கினனெனவுங் கூறினாள்".

[கங்கையின் வெண்ணிறநுரைவிளங்கும் அலையின்மீதே சீதையுடன் தோன்றிய இராமன், திருப்பாற்கடலிலே, திருப்பள்ளியெழுச்சிச் சமயத்திலே, இலக்குமியுடன் விளங்கும் விட்டுணு ஒத்தான். சீதை, தன் இடைக்கு நாணுவனபோலக் கொடிகள் நுடங்க, நடைக் கொடுங்கினபோல அன்னங்கள் ஒதுங்க, பாதத்துக்குப் பயந்தொளிப்பன போலத் தாமரைமலர்கள் நீருள் முழுக, கண்களைக்கண்டு வெருண்டன போலக் கயல்மீன்கள் தாவ, நீராடினாள். அவளுக்குச் சேடியரில்லாத குறையை நோக்கிக் கங்காதேவி சேடிபோல அவளைத் திரைக்கரத்தினால் நீராட்டுவாள்போன்றாள்.]

305. செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகம் தீர்த்து விளங்குவாள்,
ஐயன் மேனி யெலாம்அளைந் தால், இனி
வைபம் மாநர கத்திடை வைகுமே.

இ-ள். முன்பு (திருமாலின்) பாதங்களைமட்டும் பரிசிக்கப் பெற்றதனால், பாவங்களை ஒழித்து விளங்கிய கங்கை (இப்போது, அந்த) இறைவனது திருமேனி முழுதுமே தீண்டப்பெற்றதனால், உலகத்தார் (அந் நதியில் ஆடுதல்கிடக்க, அதனைக் காணுதலும் கிடக்க, அதனைச் சிந்தித்தாலும் பாவமெல்லாந் தீர்ந்துவிடுவாராதலால், இங்குள்ளாரேயன்றி நரகிலுள்ளாரும் அதனை நினைந்து பாவமொழிந்து) இனிமேல் நரகத்திலே தங்குதல் இல்லையாம்.

அளைதல்—தீண்டுதல்; கலத்தல் (சங்க அகராதி). வைகுதல்—தங்குதல். தைலமாட்டுப்படலம் ௫௩ம் பாட்டில், 'நடந்ததெனின்' என்பது 'நடந்தெனின்' எனத் தொக்குநின்றதுபோல, இந்தப்பாட்டில் அளைந்ததால்' என்பது 'அளைந்தால்' எனத் தொக்குநின்றது. 'விளங்கினாள்' என்றும் 'அளைந்தாள்' என்றும் பாடம்.

[இராமன், கங்கையில் நீராடியபின்பு, கடவுள்வணக்கம்செய்து, முனிவரிட்ட விருந்தருந்தினான். அப்போது, செருப்புத் தாங்கிய பெருத்த பாதங்களும் அவற்றின்மேலிட்ட வீரகண்டையும் சல்லடந் தரித்த தொடைகளும் சூழப் புலிவால்கள் தொங்கவிடப்பட்டுத் துலங் கும் தோலுடை சுற்றிய அரையும் அவ்வரையில் இறுகக் கட்டிய வாளும் பனஞ்சிறும்புபோலத் தொங்கும் மயிர்களையுடைய முன்கையும் அக் கையிற் பிடித்த வில்லும் பல்லுகள் தொடுக்கப்பட்டதுபோன்ற சோகி மாலையணியப்பட்டுக் கறுத்த பருத்த பாறைநேரும் மார்பும் கோப காரணமின்றிச் சுபாவத்திலேயே கோபத்தீக் கொப்புளிக்கப் பாம்புபோல நடுக்கம்விளையப் பார்க்கும் பார்வையும் நெற்கதிர்போல நெரிந்த புருவ மும் சிரித்தலற்ற சீற்றத்தோற்றமுள்ள முகமும் காரிருட் கற்றை ஒத்த கரியதலைமயிரும் எண்ணெயுண்ட இருண்ட மேனியும் இயமனும் அஞ்சும் இடிக்குரலும் உடையனாய் ஆறுகளுள் ஆழம் அதிகமான கங்கைபோல மக்களுள் மிக்க நெட்டுடலினனாய், அடுத்து நாய்தொடர, தொடுத்துக் கொம்பு கொட்டு பம்பை ஊத்தரி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு இடிக்கும் கார்மேகம்போலக் கருநிறமுடைய பரி வாரம் புடைசூழ, ஆயிரந்தோணிகளுக் கதிபதியும் கங்கைக்கரையி லுள்ள சிருங்கிபேரநகருக் கிறைவனுமான வேடர்கோமான் குகனென் பான், தேனும் மீனும் காணிக்கைப் பொருள்களாகக் கைக்கொண்டு இராமனைக் காணவந்தான்.

வந்தவன், கூடவந்த கூட்டத்தைத் தூரத்தே நிறுத்தி, வில்லையும் வாளையும் நீக்கி, அன்புநிறைந்த மனத்தினனாய், இராமன் இருந்த ஆச்சிரமத்தை அணுகினான். அணுகிக் கூவி விளிக்கத்தொடங்குமுன், இலக்குமணன் அவனை அடுத்து "நீ யார்?" என, அன்புடன் பணிந்து "நின்திருவடி தொழுதற்கு வந்தேன்; அடியேன் ஓடம்விடும் வேடன்" என்றான்.

இலக்குமணன், குகனை "இங்கே இரு" என்று அமர்த்திவிட்டு, இராமனைத்தொழுது, தொகை மிகவுள்ள சுற்றத்தினனும் தூயமனத்தின னும் தாய்போலும் அன்பினனும் கங்கைப் படவுகளுக்குத் தலைவனு மான குகனென்பவன் உன்னைக் காண வந்திருக்கின்றான்" என்றான். இராமன் அவனை அழையென, இளையவன் வரச் சொல்லக், குகன், அன்புமிகுந்து விரைந்து புகுந்து, இராமனை யிருகண்ணும் குளிரக்

கண்டு மனங் கனிந்து மண்ணில் விழுந்து பணிந்து எழுந்து உடம்பு குனிந்து வணங்கி வாய்புதைத்து நின்றான். "இருப்பாயாக" என்று இராமன் பணிக்கவும், இராஜய்த் "தேவரீர் திருவமுது செய்தற்குச் சிறந்தனவாகத் தெரிந்தெடுத்துத் தேனும் மீனும் கொண்டுவந்திருக்கின்றேன், திருவுள்ளம் யாதோ" என, இராகவன் முனிவரைநோக்கி முறுவலித்துக்கொண்டு மொழிவானாய் "அப்பா! அப் பொருள்கள் உனக்கு என்பாலுள்ள அன்புமிகுதியைவெளிப்படுத்துகின்றனவாதலால், அவைகள் தேவாமிர்தத்தினும் சிறந்தனவே; என்போலியர்க்கு அன்பால் அளிப்பன யாவையும் தூயவையேயாம். அவைகளை அங்கீகரித்து அருந்தினேனென்றேகொள். நாங்கள் இன்று இங்கேயிருந்து நாளைக்குக் கங்கையைக் கடப்பேம். நீ உன் ஊர்க்குப்போய் உன் உறவினருடன் உவந்திருந்து நாளை விடியப் படவுகளுடன்வருவாயாக" என்றான்.

அப்போது, குகன் "இக்கோலத்துடன் உன்னைக்கண்ட கண்களைத் தோண்டித் தூரத்தே யெறிந்திலேன்; நீ துன்பத் துறைதல் தெரிந்தும் உயிர் துறந்திலேன். ஆயினும் என் ஊர்க்குச் செல்லக் கருதி உன்னைப் பிரியேன்; என்னாலான ஏவற்றொழில்செய்துகொண் டிங்கே யிருப்பேன்" என்றான். அதைக்கேட்டு, இராமன், சீதாலக்குமணரை நோக்கி "இவன் போாத பேரன்புடையவன்" என்றுகூறி, அவனைக் கருணைநிறைந்தகண்களால் நோக்கி "எனக்கு இனியபொருள்கள் யாவற்றினும் இனியனான நீ எங்களோடிருப்பாயாக" என்றான். எனவே, *குகன் மீண்டும் வீழ்ந்து தாழ்ந்து தொழுதெழுந்து தன்சேனையை மாதவப் பள்ளியைச் சூழவும் நின்று காவல்செய்யப் பணித்து வில்லையும் அம்பையும் கைகளிற் பிடித்து வாளை அரைக்கச்சிற் கட்டி இராமனைச் சேவித்துநின்றான்.

306. "திருநகர் தீர்ந்த வண்ணம், இளையவ! தெரித்தி" யென்னப்
பருவரல் தம்பி கூறப், பரிந்தவன் பையுள் எய்தி
இருகணீர் அருவி சோரக் குகனும்ஆண் டிருந்தான் "என்னே!
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலும்" என்னா!

---

*பின்வரும் பாட்டு, ஸ்ரீ கவிராச ஈசுராமூர்த்திப்பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரதியிலுள்ளது:—

"அடிதொழு துவகை தூண்டி யமைத்தன னாளி யென்னத்
துடியுடைச் சேனைவெள்ளம் பள்ளியைச் சூழ வேவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கிவா யம்பு பற்றி
இடியுடை மேக மென்ன விணையடி ஏத்தி நின்றான்."

இ - ள். "தம்பி! அயோத்தியினின்றும் (நாம்) நீங்கியவகையை (இவனுக்குத்) தெரிவிப்பாயாக" என்று (இராமன்) செப்ப, இலக்குமணன் (அந்தத்) துன்பச்செய்தியைச் சொல்ல, "பூமிதேவி தவஞ்செய்(து தனக்கு அரசனாக இராமனை அடைந்) தும், யாதுகாரணத்தினாலோ, (அவன் தன்னை ஆளும் பாக்கியத்தைப்) பெற்றாளில்லை" என்று இரங்கினவனாகித் துன்பமடைந்து, இரண்டுகண்களினின்றும் கண்ணீர் அருவி (போல) வடிய, குகன், அந்த ஆச்சிரமத்திலே இருந்தான்.

தீர்ந்த - நீங்கிய. தெரித்தி - தெரியச்செய்வாய். பருவரல் - துன்பம்; முன்பின் தொடர்ச்சியால் துன்பமானசெய்தியென்று பொருள் கொள்ளநின்றது. பரிதல் - இரங்குதல். பரிந்தவன் - (இராமன் அரசாளும் பாக்கியத்தைப்பெறாத பூமிதேவியின்பொருட்டு) இரங்கினவன் (ஆகி); (இராமன்பால்) அன்பு அதிகப்பட்டவன் (ஆகி); ஐங்குறுநூறு. ஸைபயுள் - துன்பம். போலும் அசை.

[அப்போது, வாளாற் பகையிருளை ஓட்டித், திக்குவிசயஞ்செய்து, உலகமெல்லாம் ஏக சக்கரம் செலுத்தி, ஒளி பரப்பி, உலகத்தோர் சிந்தித்து வந்திக்க, அவர்கள் உள்ளத் துறைந்து மாய்ந்த சூரன் எனச் சூரியன் அத்தமித்தான். (வாள் - வாளாயுதம்; ஒளி. சக்கரம் - ஆக்கினைசக்கரம்; தேர்ச்சக்கரம். ஒளி - புகழ்; வெயில். சிந்திக்க-மதிக்க; தியானிக்க. மாய்ந்த - இறந்த; மறைந்த. சூரன் - வீரன்; சூரியன்.) இராமன் சந்தியாவந்தனம்செய்து சீதையுடன் தரையில் விரித்த புல்லுப்பாய்மீது படுத்திருந்தான். இலக்குமணன் விடியுமளவும் விழியிமையாமல் வில்லேந்திக் காத்துநின்றான். குகன் அவர்கள் நிலைமையை நோக்கிக் கண்ணீர்சோர அருவி வீழும் குன்றுபோல நின்றான்.

307. துறக்கமே முதல ஆய தூயன யாவை யேனும்
மறக்குமா நினையல் அம்மா! வரம்பில தோற்றும் மாக்கள்
இறக்குமா றிதுஎன் பான்போல் மூன்னைநாள் இறந்தான்; பின்னாள்
பிறக்குமா றிதுஎன் பான்போற் பிறந்தனன் பிறவா வெய்யோன்.

இ - ள். சூரியன், மனிதர்கள் மாயும் விதம் இது (போல்வது) என்(று தெரிவிப்) பான்போல முதல்நாள் (மாலையில்) மாய்ந்தான் (—மறைந்தான்); (அவர்கள்) தோன்றும் (பிறக்கும்) விதம் இது (போல்வது); என் (று தெரிவிப்) பான்போல, மறுநாள் (காலையில்) தோன்றினான்— (உதித்தான்).

துறக்கமே முதல ஆய தூயன யாவையேனும் மறக்குமா நினையல்—(பிறப்பை யொழித்து வீட்டைப்பெற முயல்வோரெல்லாம், நரகத்தை நோக்க, மிகவும் விரும்பத்தக்கனவாகத் தோன்றும்) சுவர்க்க முதலியன வான பரிசுத்தமான பதவிகள் யாவையாயினும் (அவைகள் வீட்டை நோக்க மிகவும் வெறுக்கத்தக்கனவாதலால், அவைகளைப் பெறவேண்டு மென்ற ஆசையை) மறந்துவிடும்படி சிந்தனைசெய்க. துறக்கம் சுவர்க்கம்-தேவலோகம். முதல ஆய - முதலியனவான. 'மறக்குமாறு,' 'மறக்குமா' வென ஈறு தொக்கது. நினையல் - நினைக. அம்மா அதிசயச் சொல். வரம்பு இல - அளவில்லாதன (ஆகி). தோற்றும் - காணப் படும். மாக்கள் - மனிதர்.

"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்பதில் 'பிறவா' என்பது 'பிறந்ததனுல் பெறுதற்குரிய நல்லபேற்றைப் பெருத' என்று பொருள்படுதலை ஒருவாறுரைப்ப, இங்கே 'பிறவா வெய்யோன்' என்றது தன்னைப்போலப் பிறப்பெய்திய ஏனைய உயிர்கள்போலப் பிறப்பாலாம் சுகதுக்கங்களை அநுபவியாத சூரியன் என்ற பொருள்பட நின்றது.

[விடியற்காலமாகத், தினகரனுகிய செஞ்ஞாயிற்றைக் கண்டு சேற்றுத் தாமரைகள் மலராநிற்க, காகுத்தனுகிய கருஞாயிற்றைக் கண்டு மைதிலியின் வதனகமலம் மலர்ந்தது. இராமன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, குகனைப் படவுகள் கொண்டுவரச் சொன்னுன். அப்போது, அவன், அருவிபொழியுங் கண்ணனுப், இராகவனது திருவடிகளைப் பிரியமாட்டாத பேரன்பினனுய் வணக்கஞ் செய்து தன் உள்ளக்கருத்தை உணர்த்துவானுய் "ஐயா! யாங்கள் உள்வேறு புறம் வேருன பொய்யொழுக்க மில்லோம்; உனது வனவாசவிரதத்துக்குப் பொருந்துவதாக யாங்கள் வாழும் இடம் வனமாகவே யிருக்கிறது. யாங்கள் எளியேமெனினும் இன்றியமையாத எப்பொருளும் குறைவில்லேம்; மாற்றுரை வெல்லும் வலியுடையேம்; தேவரீர் ஏவிய குற்றேவல்களைச் செய்புமுறைப்படியே செய்வேம்; அடியேங்களை உறவினர்போலக் கருதி எங்களூரில் நெடும்பொழு திருந்தருள்வாயாக. எங்கள்பால் தினையுண்டு; தேனுண்டு; உனக்குத் துணையாக எங்கள் உயிர்கள் உண்டு. விளையாடச் சோலையுண்டு. நீராடக் கங்கை யுண்டு. எளியே னுயிருள்ளளவும் எங்களூரில் இனிதிருந்தருள்வாயாக. எனது குடிலுக்கு ஏகுவாயாக" என்ருன். என்றது கேட்டு, இராமன், அகத்துள் அருள்நிறைந்

தவனாகி, அவ் வருள் பொங்கி யெழுந்து புறத்தேபோந்தாற்போலப் புன்னகைபுரிந்து "யாங்கள் புண்ணியதீர்த்தங்க ளாடிப் புனிதமுனிவர்களைப் போற்றி யருள்பெற்றுச் சிலநாளில் திரும்பிவருவோம்" என்றான். அவன்கருத்தை யறிந்து குகன் கடிதுசென்று படவுகளைக் கொண்டு வந்தான். இராமன் முனிவர்பால் விடைபெற்றுச் சீதாலக்குமணருடன் படவேறிக் குகன்செலுத்தச் சென்றான். அந்தப்படவு, துழாவுகின்ற துடுப்புக்கோல்கள் கால்களாக, நண்டு நடத்தல்போல நதியிலே சென்று கரையை அணுகியது. கரையை அடைந்த இராமன், சித்திரகூடத்திற்குச் செல்லும்வழியைச் சொல்லெனக் குகன், "கடைப்பட்ட நாயேன் கருத்திலுள்ளதொன்று கூறுவேன்; கேட்டருள்" என்று கூறுவானாய், "தேவரீருடன் செல்லப்பெறுவேனேல், இருளினும் வழிகாட்டவல்லேன், இனிய கனிகளும் காய்களும் தேனும் எங்கிருந்தும் கொண்டுவந்து கொடுக்கமாட்டுவேன், தங்குதற்குத் தக்க சாலை சமைப்பேன், ஒருகணமும் பிரிவுறுதற்காற்றேன். திருவுள்ளமானால், சேனையையும் உடன் கொண்டுவருவேன். ஒருபொழுதும் திருவடிகளைப் பிரியேன். பகைவர் வருவாரானால், எதிர்த்து வெல்வேன். வெல்வேனல்லேனாயின் எல்லாருக்கும் முன்னாக என்னாவி விடுவேன். உன்னைப் பிரியாமல் உடன் செல்வேன்" என்றான்.

308. அன்னவன் உரைகேளா, அமலனும் உரைநேர்வான்,
"என்னுயிர் அனையாய்நீ, இளவல்உன் இளையான்,இந்
நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலம்எல்லாம்
உன்னுடை யது,நான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்."

இ-ள். அவன் சொன்னதுகேட்டு, இராமன் விடை அளிப்பானாகி, "நீ என் உயிர் போல்வாய்: என் தம்பி உன் தம்பி: இந் நங்கை உன் பந்து: (என் ஆள்கைக் குரிய) பெரிய கடல் (சூழ்ந்த) நில உலக முழுவதும் உன்னுடையது: யான் உன் (னால் நியமிக்கப்பட்ட) தொழில் (செய்யும்) கடப்பாடுடையேன்" (என்றான்).

உரிமை—கடமை ("தத்தம துரிமைதன்னைத் தவாநெறி தலைக் கொண்டாற்ற" கந்தபு. பட்டா. ௧௪. சங்க. அகராதி). நல் நுதலவள்—நல்ல நெற்றியை உடையவள்—சீதை. கேள்—உறவாகவுள்ளாள் (ஐங்குறுநூறு). நளிர்—பெருமை; குளிர்ச்சி.

309. "துன்புள தெனினன்றோ, சுகம்உள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனஉன்னேல்;
முன்புளம் ஒருநால்வேம்; முடிவுள தெனஉன்னா
அன்புளம் இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானேம்."

இ - ள். (வெயிலில் நின்றாலல்லவா நிழல்நுமை தெரியும்; அது போல, முன்பு) துன்பம் உண்டானதென்றாலல்லவா, (பின்பு) சுகம் உண்டாம்; அதுவல்லாமல் (—என்று இப்படி நினைப்பதல்லாமல், இப் போது பிரிதலால் துன்பமே உண்டாகின்றது, இன்பமோ,) பின்பு (திரும்பக் கூடுங்காலத்திலேதானே) உளதாம் (என்று நினைத்து, இப் போதைய பிரிதலுக்கும் நெடுங்காலத்துக்குப் பிந்தியகூடுதலுக்கும்) மத்தியில் மிகவும் (நீடித்த) பிரிவுள்ளதென்று நினையாதே; (உன்னைச் சேரும்) முன்பு, (தசரத குமாரரேம்) நால்வராயிருந்தேம். இப்போது முடிவுள்ளதென்று நினைக்கவொண்ணாத அன்புடையேமாய் (ச் சகோதரர் களாக) நாம் ஐவர்களுள்ளாரானேம்.

மன்னும்—மிகவும் (பரிபாடல், சிந்தாமணி). இனி—இப்போது. 'அன்புள' என்ற பாடத்துக்கு 'அன்புளது' என்பது துவ்விகுதி கெட்டு நின்றதாகக்கொண்டு, அன்பு (உனக்கும் எங்களுக்கும்) உள்ளது என்று பொருள்கொள்ளலாம். அல்லது, துவ்விகுதிவருவியாமல் இருக் கிறபடியேகொண்டு, (உனக்கு எங்கள்பாலும் எங்களுக்கு உன்பாலும் ஏற்பட்டிருக்கிற) அன்புகள் (நிலையாக) இருக்கின்றன என்று பொருள் கொள்ளலாம். இதற்குச் சிலபாட்டுக்களுக்கு முந்திய 'தேனுள' என்ற பாட்டில் 'உள' என்பது துவ்விகுதி தொக்குவந்துள்ளது காண்க.

அரசியற்படலம் கo-ம் பாட்டில் "ஒருவேன் உள் உளே ஆகில் உய்தி யால், இருவேம் உள்ளிருவேமிருந்திலேம்" என்றும் சூர்ப்பநகைப்படலத் தில் கசo-ம் பாட்டில் "ஒருமூவேம் கலந்த காலே" என்றும் 'ஒருவேன்' 'இருவேம்' 'மூவேம்' என்றாற்போல, இப்பாட்டில் 'நால்வேம்' என்றது கவனிக்கத்தக்கது.

["எனக்குத் துணையாகவருதற்கு உன் தம்பி இலக்குமணன் இருக்கின்றான். அவனிருக்கும்போது யான்துன்புறும்படியான பகை யாதும் இன்றாம். நீயே நான், நானே நீ, என்சொற்கடவாமல் ஊருக்குப் போவாயாக" என்று குகனுக்கு இராமன்கூறிப் பின்னும் கூறுவான்.]

310. "அங்குள கிளைகாவற் கமைதியின் உளன்உம்பி;
இங்குள கிளைகாவற் கியாருளர் உரைசெய்யாய்;
உன்கிளை யெனதன்றோ; உறுதுயர் உறலாமோ;
என்கிளை இதுகா,என் ஏவலின் இனி"தென்றான்.

இ-ள். "அயோத்தியிலுள்ள நம்முடைய சுற்றத்தரைக் காத்தற்கு உன் தம்பி பரதன் பொருத்தமாயிருக்கின்றான். இங்கே யுள்ள நம்முடையசுற்றத்தாரைக் காத்தற்கு (உன்னையன்றி) யாரே உள்ளார்? சொல்லாய்; உன்சுற்றத்தார் என்சுற்றத்தாரல்லவா? (நீ என்னுடன் வந்தால், இவர்கள் காப்பாரில்லாமல்) மிக்கதுன்பமுறலாமோ? இங்கே யுள்ளாராய என் சுற்றத்தாரை என் ஆணையின்படி இனிது காப்பாயாக" என்றான் (இராமன்). உம்பி—உனது தம்பி. உறு துயர்—மிக்கதுன்பம்.

[இராமனது ஆணைப்படி நடத்தலும் அவனைப் பிரிதலின் வருத்தமும் கடவானுன குகன் விடைகொண்டான். இராமன் சீதாலக்குமணருடன் வனத்திலே தூரமான இடம் அடைய நடைகொண்டான்.]

கங்கைப்படலம் முற்றுப்பெற்றது.

---

## வனம்புகுபடலம்.

வனத்துக்குப் புறப்பட்டு வழிச்சென்று கங்கையினது தென் கரையினை எய்திய இராமன் அப்பாலுள்ள ஆரணியத்தி னுள்ளே பிரவேசித்ததைக் கூறுவது.

[அப்போது, இளவேனிற்பருவமாயிருந்தது. அது, தோற்றத்தில் ஈரமுடைமையும் உண்மையில் ஈரமின்மையுமுடைய பொதுமாதர் மனம்போலத், தனக்கு முந்திய பனிக்காலத்தின் ஈரமுடையதென்று சொல்லுதற்கு மில்லாமல், பிந்திய முதிர்வேனிற்பருவத்தின் வறட்சியுடையதென்றுசொல்லுதற்கு மில்லாமல், இரண்டுக்கும் இடைப்பட்ட பொதுத்தன்மையுடையதாயிருந்தது. அப்படி யிருந்தது, தானுள்ள இடத்திலே, தெய்விகராமனை எய்தியதாலே, தனக்குரியதினும் மிகுதியான தன்மையுடையதாகி, நீர்காலும் கார்கால ஆரம்பம்போலத் தோன்றியது: அன்றி, வெயில் நிலவுபோலக் குளிர, மரங்கள் குளிர்நிழல் கொடுக்க, மேகம் பனித்துளிபோல மழைத்துளிதூற்ற, மலர்களுள் நுழைந்து மதுமணமளைந்த மந்தமாருதம் வந்துவீசிட மயில் நடமாட வழி யினிதாக, இராமன் வனத்திலேசென்றான். அப்போது, அவன், சீதையைநோக்கிக் "கரியகூந்தலையுடைய கலாபமயிலே! மஞ்சள்வண்ணமான கொன்றைமலர்க்குவியலின்மேல் தம்பலப்பூச்சிகள்தங்குதல், பைம்பொற்பணியிற் பதித்த பதுமராகமணிகள்போல்வதைப் பார்ப்பாயாக; மாந்தளிர்போல வாய்ந்தமேனியாய்! காந்தள் மலர்கள்வந்தும் இதழைக்

கோதுதற்கு அந்தமலர்களில் அமர்ந்த கிளிகள் உன் கைக்கிளியொப்ப தைக் காண்பாயாக: எழுதரிய எழிலுடையாய்! காந்தளரும்பைப் பாம் பென்று மயங்கி மயில் கவ்வ, அதைக் கண்டு முல்லைக்கொடிகள் முறுவ லிப்பதுபோல, அக் கொடிகளின் அரும்புகள் விளங்குவதை நோக்குவாய்: அகிற்புகை யூட்டிய அளகபாரத்தினாய்! கரையருகுள்ள மலர்கள் நிறைந்த மாக்கொம்புகள் காற்றால் அலைந்து நீர்க்குள் முழுகியெழுதல், அங்க மணைத்தும் ஆபரணமணிந்த மங்கைமார்கள் நீராடுதல் போலதலைப் பாராய்: கள்ளுண்டு மயங்கிக் கண்மூடிக் காணமாட்டாத குருடர்போன்ற ஆண் வண்டுகள், பாடிக்கொண்டு பறக்கும் பெண்வண்டுகள் கண்ணாகப், பாட்டோசை கோலாக, காது கையாக, ஓசைக்கோல்பற்றி ஆசைப்பாடுற் றுத் தொடர்ந்து பறந்துபோவதைப் பார்ப்பாயாக: வனத்தின் தரையே சித்திரமெழுதும் பத்திரமாகப்,-பலநிறப்பூக்களும் அரும்புகளும் நிறைந்த கொம்புகள் அடர்ந்து கொடிகள் படர்ந்த நெடிய மரங்கள், வன்ன மயில்கள், மாங்குயில்கள், மடமான்கள் முதலானவை அவ்வவற் றின்சித்திரங்களாக,-வனம் சித்திரத்திரை ஒத்திருப்பதைக்காண்பாயாக" என்று வனத்தின் வனப்பைக் காட்டிக்கொண்டு வழிச்செல்லும்போது மலை ஒன்றை எதிர்கண்டு, "இது மாதவர் வாழிடம்" என்றான்.

அப்போது, அந்த மலைக்கண்வாழும் பரத்துவாசன், இராமனைக் கண்டு, இதயம்பூரித்து, யான் செயத்தவப்பயன் எய்தியதென்று, எதிர் கொண்டு வரவேற்கவந்தான்.]

311\. குடையினன்; நிமிர்கோலன்; குண்டிகை யினன்;மூரிச்
சடையினன்; உரிமானிற் சருமனன் மரநாரின்
உடையினன்; மயிர்நாலும் உருவினன்; நெறிபேணும்
நடையினன்; மறைநாலும் நடம்நவில் தருநாவான்.

இ-ள். (அந்த முனிவன்,) குடை தண்டு கமண்டலம் ஏந்தியோ னும், சடை மான்தோல் மரவுரியாடை தரித்தோனும், (அங்கமெங்கும்) உரோமங்கள் தொங்கும் மேனியோனும் (தவ) நெறியைப் பேணும் ஒழுக்கத்தோனும் நான்கு வேதங்களும் நடனமிடும் நாவினோனும் (ஆகத் தோன்றினான்).

நிமிர்தல் - நீளல். கோல் - ஊன்றுகோல். நிமிர்கோல், முன்பின் தொடர்ச்சியால், முனிவர்க்குரிய தண்டினை யுணர்த்தியது. குண்டிகை- கமண்டலம். மூரி-பெருமை. உரி(த்த) மானின்சருமன் (-தோலையுடைய

வன்). மாநாரின் உடை-மரவுரி. நாலுதல்-தொங்குதல். நெறி-(முனிவர்க்குரிய தவ) நெறி. பேணும் - காக்கும். நடை - ஒழுக்கம். நவிலுதல் - பயிலுதல்.

முனிவர், சௌளஞ்செய்து மயிர்கழியாமையால், மயிர்வளர்ந்து அங்கமெங்குந் தொங்கப்பெற்றவரென்பதுவிளங்க, 'மயிர் நாலும் உருவினன்' என்றார்.

இப்பாட்டிலே, பூர்வகாலத்தில் இருடியாயிருந்தார் எவ்வாறு தோன்றினரென்பதை நம் கண்ணெதிர்காட்டினாற்போலத் தவக்கோல வருணனை நன்குசெய்திருப்பது நயந்து பாராட்டத்தக்கது.

[அந்த முனிவன் இராமனைத் தன் இருப்பிடத்துக்கிட்டுச் சென்று, விருந்து அருந்துவித்து, "இந்த இடம், கங்கை யமுனை சரசுவதியாகிய மூன்று திவ்வியநதிகள் சேரும் சங்கமத்தலமாய்த் திரிவேணி சங்கமென்னும் சிறப்புநாமம் படைத்ததாதலால், இங்கே தங்கி யினிது வாழ்வாயாக" என்றான். இராமன், "இவ்விடம், அயோத்திக் கருகாகவுள்ளதாதலால், யாவரும் இங்குவருவர்; தூரமான இடத்துக் கேகுதல் நல்லது" என்று சொல்ல, முனிவன், தன் வேண்டுகோளை வற்புறுத்தானாய், "இதற்குப் பதின்காவததூரத்துக்கப்பால், சித்திரகூடபருதவம் இருக்கின்றது; அங்கே செல்லுக". என்றான்.

இராமன், அம் முனிவனை வணங்கி, விடைபெற்று, வழிச்செல்லா நிற்கையிலே, காளிந்திநதியைக் கண்டான். அதனைக் கடக்க, இலக்குமணன் மூங்கிற்கழைகளைக் கொடிகள்கொண்டு கட்டிச் செய்த தெப்பத்தில் இராமன் சீதையுடன் ஏறியிருக்க, அதனைத் தள்ளிக்கொண்டு நீந்திச் சென்று கரை சேர்த்தான். பின்பு அவர் மூவரும் பல காவதம் சென்றபோது, விண்ணாட்டவரும் அண்ணாத்தல் செய்து மேல்நோக்கிக் கண்டு வியந்து வணங்கும்படியான உயர்ச்சியும் மகத்துவமும் ஒருங்குடைய சித்திரகூட சிகரம் தெரியலுற்றது.]

வனம்புகுபடலம் முற்றுப்பெற்றது

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.